ஜனவரி 01 - ஜனவரி 07 , 2012 January 01 - January 07, 2012 பக்கங்கள் - 24 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## குற்றம் சுமத்தும் கொடாக் கண்டர்கள்

புதிய ஆண்டு
அனைவருக்கும்
ஒளிமயமாக அமைய
எமது
நல்வாழ்த்துக்கள்





இவர்களுக்கு
விடிவு எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Thampa Star Hotel

# THAMPA HOTEL

இல.10,1 ஆவது ஒழுங்கை, சின்னப்புக்குளம், வவுனியா.

தொ. பே. : 0247388010, 0245670262.

## இனிய புதுவருட வாழ்த்துக்கள் - 2012

# கோகுலம்

GOKULAM

## பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்

இல.607A, நீர்கொழும்பு வீதி, மாபொல, வத்தளை. தொ.இல: 2948398.

கோகுலம் சிறுவர் இல்லமானது 1999ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 115 பிள்ளைகளுடன் இல.607A, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளையில் ஆதரவற்ற குழந்தைகளை அரவணைக்கும் கருணை இல்லமாக இயங்கிவருகின்றது.

இங்கு உணவு, உடை, உறைவிடம், வைத்திய வசதிகள் உட்பட சகலவசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு கல்வி பயில அத்துடன் இணைந்த பாடசாலையும் உள்ளது. அவர்களுக்கு தாங்களும் தங்களால் இயன்ற அளவு உதவிசெய்து பகவான் அருள் பெற வேண்டுகின்றோம்.

A/C Name: ISKCON, A/C No : 1050669901

Bank : Commercial Bank, Kotahena Branch




அலுவலகம்: இல. 188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13. தொ.இல: 2433325. மின்னஞ்சல்: iskcon@slt.lk / www.gokulam.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோரிக்கை வைப்பவர்களைக் குற்றம் சுமத்தும் கொடாக் கண்டர்கள்!

சந்திரசேகர ஆசாத்

ஒருவரை வழிக்குக் கொண்டு வருவதானால் சாம், பேத,தான, தண்டம் என நான்கு வழிகள் இருப்பதாகக் கூறுவார்கள். இவற்றில் சிலர் ஒன்றைப் போன்ற தோற்றத்தில் இன்னொன்றைப் பாவித்துத் தமது காரியங்களை நிறைவேற்ற முயல்வதுண்டு. இது இலங்கை அரசியலுக்கு மிகவும் பரிச்சயமான விசயமாகும். அதிலும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தானம் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டு தண்டம் வழங்குவதில் கைதேர்ந்தவர். குறிப்பாக இலங்கை, இனப்பிரச்சினைத்தீர்வு விவகாரத்தில்தான் விசுவாசமாகச் செயற்படுவதாகக் காட்டிக் கொண்டு மிரட்டல்கள் மூலமும் புதிய புதிய நெருக்கடிகளை உருவாக்குவ தன் மூலமும் தான் விரும்புவனவற்றை எவ்விதக் குறைவுமின்றி நிறைவேற்றுவது ஒன்றையே இலக்காக வைத்துச் செயற்படுபவர். பல விதமான மேடைகளைப் போட்டு, பல்வேறு பாத்திரங்களை மேடையேற்றி, விதவிதமான நாடகங்களை அரங்கேற்றிய போதும் சுற்றிச் சுற்றி சூப்பரின் கொல்லைக்கு உள்ளேயே நிற்பதில் பிடிவாதமாக உள்ளவர் அவர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுகளில் வடக்குக் கிழக்கு இணைப்பு, பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டபோது அரசதரப்பு அதை நிராகரித்ததை அடுத்து பேச்சுகளில் தடங்கல் ஏற்பட்டது. எனினும் மீண்டும் அரசின் அழைப்பின் பேரில் பேச்சுக்கள் தொடங்கின. அவற்றில் கூட காணி அதிகாரம் தொடர்பாக ஆராய்வது எனவும், வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை எனவும் பொலிஸ் அதிகாரம் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் விவாதிப்பது எனவும் அரசு தெரிவித்தது. அடிப்படையில் என்ன காரணத்திற்காகப் பேச்சுகளில் தடங்கல் ஏற்பட்டதோ அந்தக் காரணம் தொடர்பாக நியாய பூர்வமான பரிசீலனை இடம்பெறவில்லை. அதாவது அரசு தனது நிலைப்பாட்டிலிருந்து எள்ளளவும் இறங்காமல் கொழுக்கட்டை வேண்டாமென்றால் மோதகம் தருகிறேன் என்ற பாணியில் நாடகமாடி வருகிறது. மேலும் எப்படியாவது பேச்சு மேசையை நாடாளுமன்றத் தெரிவுக்குழு மேடைக்கு மாற்றி அதிலும் ஒரு நீண்ட காலத்தை இழுத்து, இறுதியில் எல்லாவற்றையுமே சிதைத்து விடுவதையே இலக்காகக் கொண்டு ஒவ்வொரு அடியையும் நகர்த்தி வருகின்றது.

இப்படியான நிலையில் பேச்சுகளில் முன்னேற்றம் காணப்படாமைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது பழியைப் போடும் ஒரு பெரும் பரப்புரைத் தொடர் அரச தரப்பினாராலும், அவர்களின் பாரம்தாங்கிகளாலும் ஒரே நேரத்தில் பல முனைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் மனோ கணேசன் அவர்களுக்கு ஜனாதிபதி வாழ்த்துத் தெரிவித்தபோது இனப்பிரச்சனையைத் தீர்க்கத் தான் தயாராக இருப்பதாகவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைப் புலிகளைப் போல் அடம்பிடிக்க வேண்டாம் எனக் கூறும்படியும் கேட்டுக்கொண்டார். அதாவது குற்றம் கூட்டமைப்பில் என்பது போல் ஒரு மாயையை உருவாக்க முயன்றார். அதற்கு மனோ கணேசன் அதை இரு தரப்பும் தான் பேசித்தீர்க்க வேண்டும் எனவும் தீர்வு காணும் பொறுப்பு அரசுக்கே உண்டு எனவும் தெளிவாகவே தெரிவித்துவிட்டார்.

அதே வேளையில் கொழும்பில் தேசியப் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி அவர்கள் தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் விடுதலைப் புலிகளின் பாணியையே பின்பற்றுகின்றனர் எனவும் தனித் தீர்மானம் எடுக்க முடியாமல் புலம்பெயர் சக்திகளால் ஆட்டிப்படைக்கப்படுகின்றனர் எனவும் அவர்களின் மனநிலை மாற வேண்டும் எனவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது முக்கியம் எனவும் தெரிவித்துள்ளதுடன், அரசு பொறுமையாக நடப்பதாகவும் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என எச்சரித்தும் உள்ளார். அதாவது தானம் செய்வது போல் நடித்து தண்டவிளையாட்டைக் காட்டியுள்ளார்.

அதே வேளையில் இவ்வருட இறுதிக்குள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்குத் தீர்வு எட்டப்படும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமத்திரன் தெரிவித்த கருத்தை அரச தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவின் உறுப்பினரான சஜினிசிவாஸ்குணவர்த்தனா மறுதலித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே இனப்பிரச்சினை தொடர்பாக முடிவை எடுக்கும் எனவும் மனம் போன போக்கில் அறிக்கைகளை வெளியிட வேண்டும் எனவும் மிரட்டியுள்ளார்.

மேலும் ஜனாதிபதியின் நெருங்கிய நண்பரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான குணதாச அமரசேகர கூட்டமைப்பின் செயற்பாடுகள் எல்லை கடந்து விட்டன எனவும், இவற்றுக்கு எதிராகச் சிங்கள மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய தருணம் வந்துவிட்டதெனவும், இனியும் சிங்கள மக்கள் அமைதி காக்கக்கூடாது எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

இவ்வாறு பல முனைகளிலிருந்தும் ஒலிக்கும் பல்வேறு குரல்கள் பல்வேறு தொனியில் வெளிப்பட்டாலும் சொல்லும் செய்தியும், விடுக்கும் மிரட்டலும் ஒன்றுதான். அதாவது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது, அரசு சொல்வதற்கெல்லாம் தலையாட்டிப் பின் செல்ல வேண்டும் இல்லையேல் தாங்கள் பொறுமை இழந்து

> பண்டா செயல்வா ஒப்பந்தம்,
> டட்லி செல்வா ஒப்பந்தம், ஒஸ்லோ உடன் படிக்கை என்பன ஏதோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்களத் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவைதான். இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அதனைக்கூட குற்றமாகப் பார்ப்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக உள்ளது.

அடுத்த நடவடிக்கையில் இறங்கி விடுவார்கள் என்ற மிரட்டலே எல்லா முனைகளிலிருந்தும் விடுக்கப்படுகிறது.

அவர்களின் மிரட்டலுக்கு வலுச் சேர்க்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போதும் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பின் போதும் தமிழர் தரப்பு கடந்த காலங்களில் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவற விட்டு விட்டதாகவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவற விடக் கூடாது எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சுயநல அரசியலுக்காக இனப்பிரச்சினைக்குத் தீர்வை விரும்பவில்லை எனவும் திருவாய் மலர்ந்துள்ளார். வடக்குக் கிழக்கு இணைப்பு, காணி பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான விஷயங்களை அரசு நிராகரிப்பதை தான் ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா என்பதைப்பற்றி அவர் புத்திசாலித்தனமாகக் கதைக்காமலே விட்டு விட்டார்.

கிழக்கு முதலமைச்சர் சந்திரகாந்தனும் வடக்குக் கிழக்குப் பிரிக்கப்பட்ட பின்பு கிழக்கு சுபீட்சமடைந்து விட்டதாகக் கூறித் தன் அரச விசுவாசத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

போர் முடிவடைந்த பின்பு முதன்முதலாக ஜனாதிபதி தமிழ்தேசியக் கூட்டமைப்புடன் பேசிய ஒரு விஷயம் விடுதலைப் புலிகள் கேட்டதைக் கேளாதீர்கள் என்பது - தமிழ் மக்கள் சார்பில் எதைக் கேட்க வேண்டும் எதைக் கேட்கக் கூடாது என்பதைத் தானே தீர்மானிக்கும் ஒரு சர்வாதிகாரப் போக்கு அதில் இருந்தது. அடுத்தது விடுதலைப் புலிகள் தனி நாடு கோரிப் போராடினார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதைக் கேட்கவில்லை. ஆனால் ஜனாதிபதி அன்றிலிருந்து இன்றுவரைப் புலிகள் கேட்டது என்பது பற்றியும் புலி ஆதரவாளர்களின் கட்டளைகளுக்கு ஏற்பவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதாகவும் கூறி வருகிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோருவதெல்லாம் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஒரு நியாயபூர்வமான உரிமைகளுடன் கூரிய அதிகாரப் பரவலாக்கமே. அப்படியான நிலையில் இரு விஷயங்களையும் போட்டுக் குழப்புவது அப்பட்டமான ஒரு நய வஞ்சகத்தனமே.

பண்டா செயல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், ஒஸ்லோ உடன் படிக்கை என்பன ஏதோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்களத் தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவைதான். இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அதனைக் கூட குற்றமாகப் பார்ப்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக உள்ளது.

ஜனாதிபதி மனோ கணேசனிடம் குறிப்பிட்ட ஒரு விஷயம் தமிழ் தேசிய கூட்டமைப்பு புலிகளைப் போல் அடம் பிடிக்கிறார்கள் என்பதாகும் இன்னொரு வார்த்தையில் சொல்லப் போனால் அவர்கள் தங்கள் கோரிக்கைகளில் உறுதியாக நிற்கின்றனர் என்பதுதான்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நியாய பூர்வமான அபிலாசைகளை நிறைவு செய்வதற்கு சிங்கள மக்களைப் போன்று சகல உரிமைகளும் பெற்று இந்நாட்டில் வாழ்வதற்கும் வழி செய்வதற்காகத் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். அவர்கள் தங்கள் கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளத் தக்க வகையிலோ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுவது போன்று சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையிலோ வெட்டிக் கொத்தி முன் வைக்க முடியாது. தமிழ் மக்கள் தமக்கே உரித்தான உரிமைகளைப் பெறும் வகையில் கோரிக்கைகளை முன்வைப்பது அவர்களின் அடிப்படைக் கடமை. அவர்கள் எக் காரணம் கொண்டும் அதிலிருந்து தவறி விட முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு கொள்ள மறுப்பது ஒரு குற்றமாகக் கூறப்படுகிறது.

எற்கனவே கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. இன்று வரை இப்பேச்சுகளில் ஆக்கபூர்வமான எந்த ஒரு முடிவும் எட்டப்படவில்லை. அரச தரப்புடன் எந்த முடிவும் எட்டப்பட முடியாத நிலையில் அரச தரப்பு பெரும்பான்மையாக விளங்கக் கூடிய ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நியாயபூர்வமான ஒரு முடிவை எப்படி எட்ட முடியும்? எனவே தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்போதைய பேச்சுகளில் எடுக்கப்படும் தீர்மானங் களின் அடிப்படையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு கொள்வது தொடர்பாகப் பரிசிலிக்க முடியும் எனக் கூறியுள்ளது.

ஆனால் அதைப்பற்றி எவ்வித பொருட்படுத்தலுமின்றி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு கொள்வது பற்றியே அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.

இப் பேச்சுகளில் எந்த வித முடிவும் எட்டப்படாமலே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு பேச்சுகள் நகர்த்தப்படுமானால் இது வரை நடந்த பேச்சுகளின் அர்த்தம் என்ன? இக்கால விரயத்தின் பலன் என்ன?

அப்படியானால் தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஒரே சமயத்தில் ஏமாற்றிக் காலம் கடத்தவா இப் பேச்சுகள் இடம் பெற்றன? ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் எவ்வித பயனும் ஏற்பட முடியாது என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தென்பட ஆரம்பித்து விட்டன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பெரும்பாண்மை அங்கத்துவத்தை வகிக்கப்போகும் அரச தரப்பு தற்சமயம் பேச்சுகளில் எந்த ஒரு முடிவுக்கும் வரத் தயாரின்மை, அதில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்களுக்கு எதையுமே வழங்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் பேரினவாதக் கட்சிகளின் போக்குகள் என்பன நிச்சயமாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் எவ் வித பயனும் எற்படாது என்பதைத் தெளிவு படுத்து கின்றன.

கோரிக்கைகள் வைப்பதையும், அவை தொடர்பான நியாயங்களில் உறுதியாக நிற்பதையும் குற்றமாகக் காட்ட முயலும் கொடாக் கண்டர்கள் முன்னால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு விடாக் கண்டர்களாக இருப் பதை விட வேறு வழியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் நோக்கம்



■— நெடுந்தீவு மகேஷ்

தொலையா நினைவுகள்

கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட பஸ்ஸில் தொற்றிக் கொண்டேன். பஸ்ஸில் சன நெருக்கம் அதிகம் தான். பஸ்ஸில் ஏறிய எனக்கு அமர்வதற்கு இடம் இருக்கவில்லை. உயரத்தெரிந்த கம்பியில் தொங்கினேன். எனது நல்ல நேரம் அருகில் இருந்த பெண்ணொருவர் பரந்தனில் இறங்க ஆயத்தமானார். அவரது இருக்கையை ஒருவாறு எனதாக்கிக் கொண்டேன். அடுத்து இயக்கச்சியில் சிலர் ஏறினார்கள், இறங்கினார்கள். நான் யாழ்ப்பாணம் போக வேண்டும். எனவே எனது இருக்கையில் இப்பொழுது நிரந்தரமாகிவிட்டேன்.

பளையில் எனக்கருகே இருந்த முதியவர் இறங்கிக் கொண்டார். அந்த இடத்தை அங்கிருந்து ஏறிய பெண் பிள்ளை ஒருத்தி அவ்விடத்தை நிரப்பிக் கொண்டாள். வயது பதினொன்பது அல்லது இருபது என மதிக்கலாம். ஒரு சில 'நோட்புக்'களும் அவள் கையில் இருந்தன.

சில நிமிட நேர மௌனத்தின் பின்னர் நான் அவளுடன் பேசத் தொடங்கினேன். "எங்கே போகிறீர்கள்" எனக் கேட்டேன். அவள் யாழ்ப்பாணம் போகிறாள் . சனி ஞாயிற்றுக் கிழமைகளில் அந்த நேரத்தில் அந்த பஸ் பயணம் அவளுக்குப் புதியதல்ல. அவள் அதை வழமையாக்கிக் கொண்டிருந்தாள். பளையில் இருந்து இவ்வாறு பயணம் செய்து யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தனியார் கல்வி நிலையத்தில் படிக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவ்வாறு பயணம் செய்து அவள் கற்கின்ற பாடம் ஆங்கிலம் என்பதையும் தெரிந்து கொண்ட போது "ஏன் இவ்வளவு தூரம் பயணம் செய்து ஆங்கிலத்தைக் கற்கிறீர்கள்? உங்கள் ஊரில் அவ்வாறு கற்கும் வசதிகள் இல்லையா?" என்று கேட்டேன். அவளோ "இருக்கிறது தான். அவற்றைவிடவும் இது நல்லது" என்றாள். நல்லம் என்றால் இப்பொழுது ஆங்கில அறிவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா எனக்கேட்டேன். அவள் சொன்ன பதிலின் மூலம் இன்றைய கல்வித் திட்டத்தில் பாரிய தவறுள்ளதென்பதாக எனக்குத் தோன்றியது.

நான் கேட்ட கேள்விக்கு நேரடியாக பதில் சொல்லாமல்:

"நான் படிக்கும் இடத்தில் 'சேர்டிபிக்கெற்' தருவார்கள்" என அவள் கூறிய வார்த்தையில் சான்றிதழ்களுக்காகவே கற்கிறோம் என்ற அர்த்தம் நிறையவே பொதிந்திருந்தது. ஆனால் அது எனக்கு அர்த்தமற்றதாகத் தோன்றியது.

கல்வியும் கல்வியின் பெறுபேற்றை அறிவதற்காக நடத்தப்படும் பரீட்சைகளும் சான்றிதழ்களைப் பெற உதவுகின்றன. அந்தச் சான்றிதழ்களைக் காண்பித்தே வேலையொன்றையும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் நம்புகின்றோம். எனினும் அந்தச் சான்றிதழ்களில் குறித்திற்கேற்ப நாம் ஒவ்வொருவரும் தகுதியுடையோராய் இருக்கின்றோமா என்ற கேள்வி எழாமலே மௌனித்து விடுகிறது. இன்று சான்றிதழ்களை அள்ளிக் கட்டிக் கொண்டு வேலை தேடி அலைகிறோம். அந்த வேலை கிடைத்த பின்னரேனும் சான்றிதழ்களின் மதிப்பை உயர்த்தும் பணிகளில் நாம் ஈடுபட வேண்டாமா?

கல்வியென்பது சான்றிதழுக்காகவும் சான்றிதழ் என்பது வேலை வாய்ப்புக்காகவும் என்ற நிலை உருவாகியுள்ள இன்றைய நாட்களில் சான்றிதழைப் பெறுவதற்காகப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட வேண்டியதாக உள்ளது. அந்தச் சான்றிதழோடு வேலையிற் சேர்பவர்கள் அதற்குரிய தரத்தையும் தகுதியையும் அடையாமலேயே சான்றிதழால் தம்மை உயர்ந்தவர்கள் எனச் சொல்லிக் கொள்வதையும் காணுகின்றோம். இத்தகைய சந்தர்ப்பங்களில் 'யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியல்லே' என்ற சினிமாப் பாடல்தான் பல வேளைகளில் நினைவுக்கு வருகிறது. எங்களின் கல்வியிலும் எங்களின் வேலை வாய்ப்பு வழங்கும் வகைகளிலும் தவறுகள் உள்ளனவோ என ஐயுறாமல் இருக்க இயலவில்லை. பொய், களவு அவலம் என்பன அதிகரிக்கவும் தரமற்ற உற்பத்திகள் வெளிவருவதற்கும் இத்தகைய சான்றிதழ்களே காரணமாகலாம். வேலை வாய்ப்பைத் தேடிச் செல்லும் நாம் எதிர்பார்ப்புள்ள சான்றிதழ்களுடன் தேடலும் அது சார்ந்த பட்டறிவும் பெற்றிருத்தல் அவசியமானதாகும். எனவே நாம் பெற்ற சான்றிதழுடன் அது குறிக்கும் தகுதிகளையும் பெற முயற்சிப்போம். அதுவே கல்வியின் நோக்கத்தை நிறைவாக்கும் என்பதை நிச்சயிப்போம் .

# சாச்சாவின் ஆடுகளுடன் கவிஞர் ஜமீல்



■— மைவிலி தேவராஜா

கல்வியின் மதிப்பறியாச் சின்னஞ் சிறுவயது. மந்தைகளோடு காலம் கரைகிறது. ஆடுகளின் பின்னாகவும் மாடுகளின் கூட்டத்தோடும் வாழ்க்கையை ஓட்டப் பணிக்கப்பட்டவரின் உள்ளக் குமுறல்கள் வேதனைகள் ஆயிரம் உள்ளன. படிப்புக்கு முற்றுப் புள்ளியிட்டுப் பாட சாலைக்குச் செல்லவிடாது ஆட்டிடையனாய் அலையும் சிறுவன் ஒருவனின் ஆதங்கத்தைப் புதுக்கவிதையில் தந்துள்ளார் கவிஞர்.

கிளிசரியாக் காடுகளிலும்
குளம் குட்டைகளிலுமாக
சிரழிகிறது என் முன்பள்ளிக்காலம்
ஆடுகளோடு ஆடாக

சீமைக்கிளுவை எனச் சொல்லப்படுகின்ற கிளிசரியா மரக்காடுகளிலே ஆடுகளுக்கான இலை குழைகளுக்காகவும் அயலிலுள்ள குளம் குட்டைகளில் அவை குடிக்கும் தண்ணீருக்காகவும் ஒவ்வொரு நாளும் ஆடுகளோடு ஆடாக அவற்றின் பின்சென்று சீரழிகிறது அவனின் படிக்கும் காலம். முன்பள்ளியோடு தொடங்கிய துயரம் அவனைத் தொடர்கிறது.

அதோ அந்தச் சிறுவர்களாட்டம்
எனக்கும் படிக்க ஆசைதான்
ஆனால் ஆடுகள் மேடும் புளுக்கைகள் போல்
என்கனவுகளும் கோட்டைகளும்
மேச்சல் நிலங்களில் உதிர்கிறது

அதோ அவனது கண்ணிலே தென்படுகின்ற அந்தச் சிறுவர்களைப் போல் படிக்கும் ஆசை அவனுக்கும் உண்டு. ஆடுகள் போடும் புளுக்கைகள் போன்று எண்ணுக்கணக்கற்ற மனக்கோட்டைகளும் கனவுகளும் அவன் எண்ணத்தில் பொங்கி எழுகின்றன. ஆனால் அவை யாவுமே ஆட்டுப்புளுக்கைகள் போலவே அந்த மேய்ச்சல் நிலங்களிலேயே பயனற்று உதிர்ந்து போகின்றன என்கிறார் கவிஞர்

படிப்பு பற்றிய அவசியத்தை
உம்மா விபரிக்கும் போதெல்லாம்
சாச்சா வந்து வந்து போவார்
பெரிய பெரிய கொம்புகளோடு

அம்மாவுக்கு அவனைப் படிப்பிக்க வேண்டும் என்ற ஆசை மேலெழும் போதெல்லாம் மகனிடம் படிப்பின் அவசியத்தை அவள் விபரித்திருக்கிறாள். அப்பொழுதெல்லாம் அவன் சாச்சா என அழைக்கும் சிறிய தந்தையார் பெரிய கொம்புகளோடு முட்ட வரும் ஆடுகள் போல வந்து அவற்றை மறுத்துரைத்து எதிர்த்த காட்சி அவனையும் பயமுறுத்துகிறது.

பள்ளிக்கூடம் பற்றிய ஆசைகள்
ஆடுகளின் கழுத்தில் தொங்கும் மணியாக
என் படுக்கையறை முழுவதும் ஒலிக்கிறது
தூக்கத்தைக் கலைத்தபடியாக

பள்ளிக்கூடம் செல்ல வேண்டும் படிக்க வேண்டும் எனக் கனவு காணும் அச்சிறுவனைச் சூழ்ந்த எண்ணங்கள் அவன் மேய்க்கும் ஆட்டு மந்தைகளின் கழுத்துகளில் தொங்கும் மணிகளாய் அவனது தூக்கத்தையே கலைத்து படுக்கையறை முழுவதும் ஒலிக்கிறது. அவனது ஆசைகள் நிராசைகளாகிப் போய்விடுவதைக் கண்டு ஆதங்கப்படுகின்றார் கவிஞர் ஜமீல்



அப்துல் றகுமான், அப்துல் ஜமீல் எனும் முழுப் பெயரைக் கொண்ட இவர் அம்பாறை மாவட்டம், பெரிய நீலாவணை, மருதமுனையைச் சேர்ந்தவர். "ஒரு போர் வீரனின் உறையில் இருக்கும் வாளைப் போன்று கூர்மையானது கவிதை" என்கின்ற அவரது வார்த்தைகளுக்குள் பொதிந்துள்ள உண்மைகள் அவரது கவிதைகளை வாசிக்கும் போது வெளிப்படுகின்றன. 'உடையக் காத்திருத்தல்' என்னும் அவரது கவிதைத் தொகுதியிலிருந்து பெறப்பட்ட 'சாச்சாவின் ஆடுகள்' எனும் கவிதையே இது . அவரது கவிதைகள் தரும் கருத்துக்களுக்குள் அவரின் ஆளுமை வாழ்கிறது. அவரது கவிதைகள் புதுக்கவிதை இலக்கியத்தின் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும் துணைநிற்கும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நா.யோகேந்திரநாதன் ■

# மௌன மனவெளிகள்

இளையவன் சொர்ணம் ஏறிய காரை விலத்திய போது அவள் பார்த்த பார்வையும் அவள் முகத்தில் படர்ந்த மெல்லிய புன்னகையும் ஒரு சில வினாடிகளுக்குள்ளேயே ஆயிரமாயிரம் கதைகளைச் சொல்லி விட்டன போலவே மனதுக்குள் தோன்றியது. ஏனோ சம்மந்தமில்லாமலே கிணற்றடியில் அந்த மின்னல் வெட்டும் நேரமும் அவளின் கண்ணில் பட்ட அவளின் கோலமும் அவன் நினைவில் வந்து போயின.

அவன் காலையில் சீவ வேண்டிய பனைகளின் வேலை அனைத்தும் முடித்து விட்டான். இனி வீட்டில் கொண்டு போய் வைத்து விட்டு தோட்டத்திற்குப் போக வேண்டியதுதான். வீடு தேடி வரும் வாடிக்கையாளருக்கு தாய் செல்லியே கள்ளு ஊற்றிக் கொடுப்பாள்.

அவனது தகப்பன் வேலன் நல்ல திடகாத்திரமானவன். ஐம்பது அறுபது பனைகளில் ஓய்வெடுக்காது தொடர்ச்சியாக ஓலைவெட்டும் ஆற்றல் படைத்தவன். அவன் அடித்துலாவில் ஏறினால் துலாமிதிப்போர் களைகட்டி விடும். விதானையார் வேலி அடைப்பு, வீடுமேய்ச்சல் என எந்த வேலை என்றாலும் அவனைத் தான் கூப்பிடுவார்.

ஆனால் ஒரு முறை மூத்தநாயனார் கோவிலில் மூன்று நாள் தொடர்ந்து நித்திரை முழித்து திருவிழா பார்த்துவிட்டு, பகல் தோட்டத்தில் தண்ணி மாறிக் கொண்டிருந்த போது தலைசுற்றி விழுந்தவன் தான். அதனுடன் ஒரு கையும், காலும் இழுத்து விட்டது. பாரிசவாதம் அவனின் கடும் உழைப்புக்கு விடை கொடுத்து வீட்டுக்குள்ளேயே முடக்கி விட்டது.

அப்போது இளையவன் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அவன் படிக்கும் போதே லீவு நாட்களில் தகப்பனுடன் சென்று தொழில்களை நன்றாகவே கற்றிருந்தான். எனவே படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டுக் குடும்பப் பொறுப்பைத் தனது தோளில் சுமத்துக் கொண்டான்.

விதானையார் வீடு இப்போ எல்லா வேலைகளுக்கும் அவனையே கூப்பிடுமளவுக்கு அவனின் தொழில் தேர்ச்சி அமைந்திருந்தது.

விதானையார் வீட்டில் விரதம், துவசம் என எவ்வளவு விசேஷம் நடந்தாலும் இளையவனுக்கு அங்கு தான் மதிய உணவு.

அவன் தற்செயலாய் வராவிட்டாலும் உடனே சீதேவிப்பாட்டி ஆளைவிட்டு செல்லியைக் கூப்பிட்டு அவனிடம் சாப்பாடு கொடுத்து அனுப்பிவிடுவாள்.

சொர்ணமும் ஒரு சின்ன வேலை என்றாலும் அவனைக் கொண்டுதான் செய்விப்பாள். அவனும் முகம் சுழிக்காமல் செய்து முடித்துவிடுவான்.

ஆனால் காலை கிணற்றடியில் இடம்பெற்ற சம்பவமும், காரடியில் அவள் கண்ட அந்தப் புன்னகையும் ஏதோ வழமைக்கு மாறானவையாகவே அவனுக்குத் தோன்றின. அவற்றிலை மறக்க வேண்டும் என நினைத்தாலும் அவை திரும்பத் திரும்ப ஞாபகத்துக்கு வந்து கொண்டேயிருந்தன.

காரை முட்கள் நிறைந்த அந்தப் பனங்கூடலில் ஒற்றையடிப் பாதையில் நடந்து கொண்டிருந்த போது ஈச்சம் புதருக்குள்ளிருந்து முயல் ஒன்று பாய்ந்து ஓடியது. ஒரு தடியை எடுத்து அதை எறிந்து விழுத்தும் நோக்குடன் பாதையை விட்டு அருகில் கால் வைத்த போது காலில் ஏதோ குத்தி ஏறியது போல வலித்தது. அவன் குனிந்து பார்த்தான். கால் பாதத்தில் ஒரு அணிஞ்சில் முள் ஆழமாக ஏறியிருந்தது. சிரமப்பட்டு அதைப் பிடுங்கி எறிந்தான். இரத்தம் கசியத் தொடங்கியது. முயலைத் தவற விட்ட ஏமாற்றத்துடன் அவன் நடக்க ஆரம்பித்தான்.

கால் நிலத்தில் படும் போது வலியெடுத்தது மட்டுமின்றி முள்ளுக் குத்திய இடம் விறு விறுக்கத் தொடங்கியிருந்தது. அவன் வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

சொர்ணத்துக்கு அன்று எஸ்.எஸ்.ஸி பரீட்சையின் கடைசிப் பாடம். தமிழ் இலக்கியம் அவள் விரும்பிப் படிக்கும் பாடங்களில் ஒன்று. எவ்வித தாமதமுமின்றி கேள்விகளுக்கு வேகமாக விடைகளை எழுதித்தள்ளிக் கொண்டிருந்தாள். கடைசிக் கேள்வி வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும் என்ற கும்பகர்ணன் வதைப்படலப் பாடலுக்கு பொழிப்பு எழுதி விளக்கம் எடுக்க வேண்டும். இராவணனின் மார்பும், தோளும் எப்படி இருக்கும் என்பதை வித்துவான் கனகசபை விளக்கப்படுத்துவதைக் கேட்டு அவள் தனக்குள் ஒரு கற்பனையை வளர்த்திருந்தாள். ஆனால் இப்போ அந்த வரிகளைப் பார்த்த போது இளையவனின் மார்பும் தோள்களுமே நினைவுக்கு வந்தன. தனக்குள்ளாகவே அவள் சிரித்துக் கொண்டு விளக்கத்தை எழுத ஆரம்பித்தாள். முன்னெப்போதையும் விட மிகத் திறமான முறையில் விளக்கம் எழுதிவிட்டு திருப்தியுடன் எழுதிய தாள்களை கோர்த்துக் கட்டினாள்.

ஒவ்வொரு பாடமும் எழுதி முடித்து வெளியே வரும் போது அவளை லில்லி ரீச்சர் அழைக்கத் தவறுவதில்லை. அன்றும் ஒரு மாணவி வந்து லில்லி ரீச்சர் அழைப்பதாகக் கூறினாள்.

ரீச்சர் கேள்விப் பேப்பர்களை வாங்கிப் பார்த்து அவளிடம் எழுதிய விபரம் பற்றிக் கேட்டு விட்டு




"உனக்கு இந்த முறை கெமிஸ்ரி, பிஸிக்ஸ், சூவொலஜி, இலக்கியம் நாலிலும் கட்டாயம் 'டி' வரும் மற்றப் பாடங்களிலும் 'சி' எடுப்பீர். எஸ்.எச்.சிக்கு பயோ செய்யும், கட்டாயம் மெடிசின் எடுபடுவீர் என்றார்.

சொர்ணம் மகிழ்ச்சியுடன் தலையசைத்தாள். அவளின் நினைவில் மந்திகை மருத்துவமனை விறாந்தையில் தான் கழுத்தில் ஸ்தெதஸ்கோப்புடன் 'டக், டக்'என நடந்து போவதாக ஒரு முறை நிழலாடி மறைந்தது.

அந்த நேரத்தில் தூரத்தில் நின்று சகமாணவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த தங்கவேல் அவளைக் கண்டதும் அருகில் வந்தான். அவனும் சொர்ணலட்சுமியைப் போலவே மிகவும் கெட்டிக்கார மாணவன் எனப் பெயரெடுத்தவன்.

லில்லி ரீச்சர் அவனைப் பார்த்து, "வேல்" எச்.எஸ்.சிக்கு எந்தப் பள்ளிக்கூடம் [illegible] போறீர்? எனக் கேட்டாள். அவன் சற்று யோசித்து விட்டு "ஹாட்லிக்குத்தான் ரீச்சர்" என்றான்.

ரீச்சர் ஒரு புன்னகையுடன் கேட்டாள் "சொர்ணமும் வட இந்துவுக்கோ அல்லது மெதடிஸ்க்கோ போடுவாள். அப்ப ஹாட்லியிலை ஆரோடை போட்டி போடுவீர்கள்!" அவன் எவ்வித தயக்கமுமில்லாமல் சொன்னான் "போட்டியைப் பிறகு மெடிக்கல் கொலிஜிலை தொடருவம்"

மெடிசின் செய்வதில் அவனுக்கிருந்த உறுதியும் தனது திறமையில் அவன் வைத்திருக்கும் நம்பிக்கையும் லில்லி ரீச்சருக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவள் பயோ சயன்ஸ் ஆசிரியையாகையால் அவளும் அவர்கள் மெடிசினுக்கு எடுபடுவார்கள் என்பதில் உறுதியாக நம்பினாள்.

எப்படியிருப்பினும் இரு கெட்டிக்கார மாணவர்கள் தன்னை விட்டுப்பிரிவது அவளுக்குக் கவலையாகத்தான் இருந்தது. ஆனால் அந்தப் பாடசாலையில் எஸ்.எஸ்.சிக்கு மேல் வகுப்புக்கள் இல்லாத நிலையில் அவள் தான் என்ன செய்ய முடியும்.

எல்லோரும் ரீச்சரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு புறப்படத் தயாரானார்கள். லில்லி ரீச்சர் ஒவ்வொரு வருட இறுதியிலும் இப்படியான கவலையைச் சந்திப்பதுண்டு. ஆனால் கடந்த மாதம் அடுத்த வருடம் அங்கு எச்.எஸ்.ஸி தொடங்க முயற்சி எடுப்பதாக அதிபர் கூறியிருந்தார். அது மட்டும் நிறைவேறினால் அவர்கள் இருவரையும் தனது பாடசாலையிலேயே பல்கலைக் கழகம் அனுப்ப முடியும் என நினைத்து அவள் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள்.

அன்று மாலை அவள் தான் ஆசையாக வளர்க்கும் பூக்கன்றுகளுக்கு நீரூற்றிக் கொண்டிருந்த போது இளையவன் இரு பனையோலைகளை தோளில் காவிக் கொண்டு வந்து முற்றத்தில் போட்டான். இன்னும் சிறிது நேரத்தில் சின்ன ஓலைகளை சார்க்கிலிருந்து பிரித்தெடுத்து ஓலை குத்தியால் கீலங்களாக்கி மாடுகளுக்குப் போடுவான்.

இளையவன் விதானையாருக்கென எடுத்து வந்த தனிப் பனைக் கள்ளை முட்டியுடன் வேலிக் கதியாலில் கொழுவி விட்டு, மீண்டும் முற்றத்துக்கு வந்தான். தான் கொண்டு வந்த ஓலையை எடுத்து நிமிர்த்திப் பிடித்து ஓலைச் சிறகுகளைத் தன் கத்தியால் சிராய்த்து வரி மட்டையை வேறாக்கினான்.

அவன் மூரிமட்டைகளைக் கொண்டு போய் வேலிக்கரையில் போட்டு விட்டுத் திரும்பும் போது தான் தற்செயலாக அங்குவந்த சீதேவிப் பாட்டி அவன் ஒரு காலை நிலத்தில் வைக்க சிரமப்படுவதை அவதானித்தாள்.

"டேய் இளையவன்! என்னடா ஒரு காலை நொண்டுறாய்" எனக் கேட்டாள்.

அவன் ஒரு அசட்டுச் சிரிப்புடன் சொல்லியவாறே "அது அடிக்காலிலை அணிஞ்சி முள்ளு ஒன்று ஏறிவிட்டுது" என்றான்.

"ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நடந்தே அணிஞ்சி முள்ளிலை காலை வைச்சனி..எடேய் விஷமல்லே?" எனச் சொல்லியவாறே சீதேவிப்பாட்டி அவனின் காலைப் பார்த்தாள்.

"அது சாடையாய் நோகுது! மாறிடும்" என்றான் அவன்.

"விசர்க்கதை கதைக்கிறாய். பொல்லாத விஷமடா.. நில் உப்பு வைத்து கட்ட வேணும்" என்று விட்டு பாட்டி சொர்ணத்தைப் பார்த்து "சின்னப்பெட்டை வந்திட்டியே?" எனக் கேட்டாள்.

"ஓமணை. ஆட்டுக்கு குழை வெட்டுறா?"

"உடனை வரச் சொல்லி கூப்பிடு?" என்று விட்டு சீதேவிப்பாட்டி சமையலறையை நோக்கி நடந்தாள்.

சின்னப் பெட்டை என அழைக்கப்படும் சின்னன் வரவும் கிழவி உப்புக் கல்லுடனும், நெருப்புக் கொள்ளியுடனும் வருவது தெரிந்தது.

சொர்ணம் மெல்ல அவனருகில் சென்று கேட்டாள் "உப்புச் சுடத் தாங்குவியே?"

"என்ன செய்யிறது? தாங்கத்தானே வேணும்! இல்லாட்டி முள்தாக்கி விடுமே!" என்றான் மெல்லிய குரலில் அவன் முகத்திலும் ஒரு பயம் பரவியிருந்தது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ.சூரியன்

நிகிதா அந்தப் புதர் மறைவில் இருந்து சுதாவின் நடவடிக்கையை அவதானித்துக் கொண்டிருந்தாள். தனது நோக்கெலத்தின் உதவியுடன் அந்த இருட்டில் வேறு பொருளை சுதா நகர்வது தெரிந்தது. கொஞ்ச தூரம் சென்ற சுதா அந்த இருட்டில் எதுவோ காலில் தடுக்க அவன் குனிந்து கையிலே எடுத்தது புரிந்தது. மறுகணம் அவன் நின்ற இடத்திலிருந்து 'ஹைவோல்ட்' மின்சாரம் பாய்வது போன்று பிரகாசமான ஒளி தெறித்தது. அந்த வினாடி "அம்மா... ஆ..." என்ற அவலக் குரலுடன் சுதா சரிந்து நிகிதா இருந்த புதருக்கு அருகில் வந்து விழுந்தான்.

நிகிதா ஒருகணம் திக்கித்துப் போனாள். "என்ன இது? சுதாவை வீசி எறிந்தது எது?" என்று புரியாத அவள் தன் நோக்கெலத்தின் உதவியுடன் பட்டைக்கும் இருட்டைக் கட்டுப்படுத்தியவளாக சுதா விழுந்த இடத்தை நோக்கி ஓடினாள். "ஏய்



சுதா... என்னாச்சு...?"

கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி தூக்கி வீசப்பட்ட சுதா, தன்னை நோக்கி ஒரு பேச்சுக் குரல் வருவதை அவதானித்தவன் உடனடியாகக் கத்தினான்.

"என் பக்கமாய் நோக்கி வராதே. ஒரு அடி என்னை நோக்கி வந்தாலும் என் பிஸ்டலால் சுட்டுவிடுவேன்" என்றான்.

"அப்படிச் செய்யாதே சுதா... அது நான் தான் நிகிதா" தனது குரலைக் காட்டவும்,

"சோ நிகி நான் அந்த உருவமாக்கும் என்று பயந்திட்டேன்" என முனகினான்.

'இட்ஸ் ஓகே' எனக் கூறிய அவளும் அவனை நெருங்கி "என்ன நடந்தது சுதா. ஏன் இப்படி...?"

என்று கூறிக் கொண்டே சுதாவை எழுப்ப முயற்சி செய்தாள். நல்ல வேளையாக புற்தரையில் சுதா விழுந்ததால் பெரிதாக அடியொன்றும் படவில்லை. அவனது கைகால்களில் சிறு சிறு முட்கள் குத்தியதோடு சரி. அவன் உடலில் இருந்து அந்த முட்களை எடுத்து விட்டாள்.

தனது அதிர்ச்சியிலிருந்து மீளாதவனாக "நிகி அங்கே ஏதோ இருக்கிறது" என்றான்.

நிச்சயமாக நீ அடிபட்டபோது அதிசக்தியான மின்சாரம் வெளியான வெளிச்சத்தை நானும் அவதானித்தேன். அப்படி கண்ணுக்குத் தெரியாத பொருள் எது? "வேற்றுக் கிரகவாசிகள் ஏதாவது மாய ஜாலம் செய்திருக்கக் கூடும்" என்றபடியே சுதா தரையில் கைவிரல் ஊன்றி எழ முயற்சித்தான். உடனேயே அவனது கையைப் பற்றியவளாக சுதா அங்கு பார் அந்த இரண்டு சோடிக் கண்களும் நீ அடிபட்ட இடத்தை நோக்கிச் செல்கிறது என்றாள்.

அதைப் பார்த்த சுதா சடுதியாக நிகிதாவை இழுத்து புதருக்குள் மறைத்து விட்டு பார்வையைப் பதித்து கொஞ்சம் மௌனமாகவே இருந்தான்.

"ஏன் சுதா நாங்கள் மறைந்திருக்கிறது அதுகளுக்கு தெரியாதா?"

"தெரிந்திருக்கலாம். ஏன் நாம் கதைப்பதைக் கூட அவை அறிந்திருக்கலாம். இருந்தாலும் நாம் மறைந்தே இருப்போம்."

"சுதா, எனக்கென்னவோ பயமா இருக்கு. வாடா இங்க இருந்து போய் விடுவோம்."

"அதுதான் எனக்கும் சரியாப்படுது" இவன் இவ்வாறு கூறிக் கொண்டே அவளுக்கு அந்த இரு சோடிக் கண்களையும் சுட்டிக் காட்டி "ஏன் நிகி மனிதர்களுடைய கண்கள் இப்படி இரவு நேரத்தில் பிரகாசிக்குமா?

"இல்லை சுதா. பூனைகள், சில காட்டு மிருகங்களின் கண்கள் இரவில் பிரகாசிக்கும் இயல்பைக் கொண்டுள்ளன. ஆனாலும் இப்படி இருவரின் கண்களைப் போல பளபளக்காது."

"ஆமா... அந்தக் கண்களைப் பாரு. கோலிக்குண்டு போல நிறைந்த கண்ணாடியான கண்கள்."

"ஓமடா போ... போய் இன்னும் அருகிலே போய்ப் பார் அடிபட... வசிகட ஆகிறோம்... கொல்லை... பறியொன்று வைப்பு வேறு உலகத்துப் பயமே வாறதடா"

"செல்லம் ... நான் இங்க செத்தால் என்ர பேய் பில தான சுத்தப்போறன்."

"ஓமடா செத்துப்போ. நீ முதலில் சா. பிறகு நானும் செத்துப்போறன். இப்படி செத்துச் செத்து விளையாடுவோம். ஆனா பார் அதுகள் எங்க வந்து என்ன செய்கிறதென்று நீ கவனமுடன் சொல் அறியோ என்னமோ. இங்க நாங்க அதிக நேரம் நின்றுட்டால் நிச்சயமாக செத்துத்தான் போவோம்"

"ஏய் நிகி அங்க பார்" எனத் திடீரென்று சுதா சுதாவின் கை சுட்டிக் காட்டிய திசையில் அவதானித்த நிகிதாவிற்கு மயக்கமே வரும் போலிருந்தது. ஏனென்றால் அந்த வெட்ட வெளியில் அங்கு மின்னும் உடலில்லா அந்தக் கண்கள் முன்னர் சுதா அடிபட்ட அந்த இடத்தை அண்மித்ததும் திடீரென்று காணாமல் போய்விட்டது.

"போ... அந்த இடத்தில நான் ஏதோ மர்மம் இருக்கிறது. வா சுதா போய்விடலாம். இங்க நாம இருக்கிற ஒவ்வொரு கணமும் எங்களுக்கு ஆபத்து".

"கொஞ்சம் பொறு நிகி. இந்த இருட்டில இந்த மலையில இருந்து அவ்வளவு எளிதா இறங்க முடியாது. இப்படியே இந்தப் புதரிலேயே இருந்து இரவுப் பொழுதைக் கழிப்போம். விடியக் கிளம்புவோம்"

"பேய்களுக்குப் பயமா இருக்குதா?"

"பயமா இருக்கு. இப்படியே அமைதியாக இருக்கிற சமயம் அதுகள் ஒன்றுமே செய்யாது. காலையில நாம் நாங்க போகலாமே போகலாம்" என்று கூறிவிட்டு நிகிதா சுதாவைத் தூக்கி தனக்கு அருகாமையாகக் கொடுத்து புல் தரையில் சரிந்தான் சுதா. பின்னரும் நான் சிவ... என்று இரவு முழுவதும் தூங்கிப் போனான்.

"அவ்வளவோ... சொத்துக்களைக் கைகளால் பார்த்துக் கொண்டிருந்த நிகி "இருவருக்கும் பார் பார்... பயமின்மையால் உறங்கிறான்." என நினைத்துக் கொண்டு முழுதாய் நித்திரையை பல மணி நேரம் பயத்தில் விழித்திருந்து அருகிலிருந்தும் பார்த்தவள் அசைவற்று... உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

பொழுது பொழுதென்று பொழுது விடிந்தது. மெல்ல சுதாதான் கண் விழித்தான். அருகில் தூங்கிக் கொண்டிருந்த நிகிதாவை எழுப்பினான்.

"நிகி எழும்பிடு..."

நிகிதா கண் விழித்து சுதாவைப் பார்த்து அழுகையாக "நைட் ஆட்டு போச்சில்ல"

"ஆ.. இப்ப போயிட்டுத் தான் நிகி வா. கனவைக் காணாமல்" என்றான் அவன்.

(தொடரும்)

*———*

## பூமியைச் சுற்றும் விண்கற்கள்



பூமியை கடந்த 2006ம் ஆண்டு முதல் 2007ம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஒரு தற்காலிக துணைக்கோள் சுற்றி வந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 2006ம் ஆண்டில் ஒரு மீற்றர் நீளம் கொண்ட ஒரு விண்கல் பூமியைச் சுற்றி வந்தது. இது ஏதாவது ஒரு செயற்கைக் கோளின் சிதைந்த பாகமாக இருக்கலாம் என்றே ஆரம்பத்தில் விஞ்ஞானிகள் கருதினர். ஆனால் அதைத் தெளிவாக ஆராய்ந்த போது அது ஒரு விண்கல் என்பது தெரிய வந்தது. பூமியின் ஈர்ப்பு விசையால் தற்காலிகமாக இழுக்கப்பட்டு, பூமியின் சுற்றுப்பாதைக்குள் வந்த அந்த விண்கல் கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் பூமியை சுற்றி விட்டுச் சென்றுள்ளது. இது குறித்து ஆய்வு நடத்திய அமெரிக்காவின் கார்ன்வெல் பல்கலைக்கழகத்தின் விண்ணியல் ஆராய்ச்சியாளர்கள், இது போல எத்தனையோ விண்கற்கள் பூமியை சுற்றி வருவதாகவும், பூமிக்கு அருகிலுள்ள துணைக்கோள் தான் என்று சொல்வது தவறு என்றும் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்பூஞ்சோலை



## உன்னதக் காதல்


அன்பே!
விடு விடு – ஏன்
வருந்துகிறாய்
நம் காதல்
கல்லறையிலாவது
வாழட்டுமே
அப்படியாவது – எமது
உன்னதமான
காதலை
புரிந்து கொள்ளட்டும் – நம்
சுற்றத்தவர்கள்....

-கொற்றாவத்தை
வசந்தமது.

## எண்ணங்களில் ஏற்றம் வேண்டும்

கரத்தில் பேனா ஏந்தி
கடதாசியில் போர்தொடுக்க
மனத்தில் ஈரம்கொண்டு
மாந்தரில் அன்புகாட்ட-
பணத்தை வீசிவிட்டு
பண்பை மதித்துவாழ-
தனத்தை அள்ளி எடுத்து
தானம் செய்துவாழ-
அகத்தில் அழகு கொண்டு
முகத்தில் பிரதிபலிக்க-
கல்வியில் முன்னேற்றம் கொண்டு
கடைசிவரை உயர்ந்து நிற்க -நம்
எண்ணங்களில் ஏற்றம் வேண்டும்.


- விந்தா. வி, வை.கோப்பாய்.



## தமிழன்

மரணத்தின் தோழன்
வீரத்தின் சொந்தக்காரன்
உழைப்பின் நாயகன்
உண்மையின் உடன்பிறப்பு
ஆனால்-
துரோகத்தில்
காக்கை வன்னியனும்
இவனே

-வேம்படி புள்ளப்பெண்மணி-



## இப்படித்தான் வாழவேண்டும்.


பள்ளியில் படிக்கும் போது
படிப்பினில் கவனம் தேவை
பருவம் அடைந்த போது
பண்புடன் இருக்க வேண்டும்!

மன்னிக்கும் இதயம் வேண்டும்
மாசற்று வாழவேண்டும்
அன்னையும் பிதாவையும்
தெய்வமாய் மதிக்க வேண்டும்!

பிழை செய்தால் திருத்த வேண்டும்
பெரியோரைப் பேண வேண்டும்
உழைத்துண்டு வாழ வேண்டும்
உண்மையைப் பேச வேண்டும்!

நல்லதைச் செய்ய வேண்டும்
நம் நாட்டினை நேசிக்க வேண்டும்
நம்மினம் நம் மொழியை
எந்நாளும் போற்ற வேண்டும்!

-சேனையூரன்,
மூதூர் கிழக்கு.



## அலைபாயும் காற்றும் முடிந்தகவசமும்

மறந்தால் மன்னித்து விடுங்கள்
ஒருநாளில் அல்லது மறுநாளில்
முகம் தாங்கிய உடல்
காணாமல் போகலாம்
[illegible]
விரல் நறுக்கிப் போகலாம்
விரல் நீலம் [illegible] போகலாம்
ஒரு கொலை [illegible]
என்று யாராலும் சொல்ல முடியாது
கரிய ஆயுதசாலைகள் [illegible]
வாழ்க்கையும் இரு கூறாக்கப்பட்டது
எல்லோரையும் [illegible]
முடிவில் [illegible] போல
வானத்தில் இடைவெளி [illegible]
[illegible] கத்தி
எல்லோரையும் மறைத்துக் கொண்டிருக்கிறது
எல்லோரையும் தூக்கம் மறைக்கிறது
குழந்தைகள் வீரிட்டு அழுகின்றன
விறைத்தபடி போரின் சாவம் நஞ்சாய்க் கிடக்கிறது
இனியும் சாவின் [illegible]
[illegible] செய்ய அறுபது வயது
இளைஞன் சம்மதிக்கிறானில்லை
[illegible] முட்கள்
போது தொடங்கின்றன.
இறுதிப்போரின் நடத்தைகள் பற்றி.

சத்தியா மெல்வின்

## உலகம்

அம்மாவின்
முந்தானைக்குள் இருந்த
போது
முந்தானை தான்
உலகமாகத் தெரிந்தது!
அப்பாவின்
சுண்டு விரல் பிடித்து
நடந்தபோது
சுண்டு விரல் தான்
உலகமாகத் தெரிந்தது.
புத்தகத் தோட்டத்தில்
புழுவாய்
உலவியபோது
புத்தகம் தான்
உலகமாகத் தெரிந்தது
காதலின்
அண்டத்திற்குள் புகுந்த போது
காதல் தான்
பேரண்டமாகத் தெரிந்தது
முந்தானை!
சுண்டுவிரல் !!
புத்தகம்!!!
இவையாவும் காதலெனும்
பெரும் புள்ளியால்
சிறு புள்ளியாய்த்
தேய்ந்து போனது.

-கொற்றையூர் மகே-மேனன்-





## பெண்ணின் பிறப்பு அற்புதம்

பெண்ணின் பிறப்பு
அற்புதம்
பெண் பிள்ளையைப்
படைப்பது
மகத்துவம்!

பெண் கருவைச்
சுமப்பது கடுந்தவம்
பிள்ளையைப்
பிரசவிப்பது
பெரும் துன்பத்திலும்
இன்பம்!

மெழுகுவர்த்தியாக
ஒளிவீசி
உழைத்து உருக்குலைபவள்
பெண்!

பிறந்த வீட்டின்
பெருமையை
புகுந்த வீட்டில் காத்து
மாமி மாமாவுக்கு ஏற்ற
மருமகளாகவும் தன்
மணாளனுக்கு வாய்த்த
மனைவியாகவும் வாழ்ந்து
மனையறம் காப்பவள்
பெண்!

பெண்ணின் பிறப்பு
அற்புதம்!

-கவிதாயினி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மம்பட்டியான்

எண்பதுகளில் தியாகராஜன் நடித்து இளையராஜா இசையால் 'க்ளாஸிக்' என்ற . அந்தஸ்தைப் பெற்ற மலையூர் மம்பட்டியான் படம், இப்போது பிரஷாந்த் நடிப்பல் மம்பட்டியானாக மறுவடிவம் பெற்று வந்துள்ளது.

மலையூர் கிராமத்தில் நேர்மையான விவசாய கூலி விஜயகுமார். ஊர்ப் பண்ணையார் கோட்டா சீனிவாசராவ் நிலத்தில் கிடைக்கும் புதையலை அரசாங்கத்திடம்தான் ஒப்படைக்க வேண்டும் என அவர் பிடிவாதம் காட்ட, கோட்டாவின் ஆட்கள் அவரையும் மனைவியையும் கொன்றுவிடுகிறார்கள். இதில் பொங்கியெழும் மகன் மம்பட்டியான் பிரஷாந்த், ஊர்த் திருவிழாவில் கோட்டாவையும் அவரது ஆட்கள் ஏழு பேரையும் வெட்டிக் கொன்றுவிட்டு தலைமறைவாகிவிடுகிறார்.

பண்ணையாரால் வஞ்சிக்கப்பட்ட சிலரும் அவருடன் சேர்ந்து கொள்ள, காட்டுக்குள் தங்கியபடி, அந்த வழியாக வரும் பெரும்பணக்காரர்களைக் கொள்ளையடித்து, ஊர் மக்களுக்கு நல்லது செய்கிறார். பொலீஸ் துரத்துகிறது. ஆனால் மம்பட்டியான் நிழலைக் கூட தொட முடியாமல் தோற்றுக் கொண்டே இருக்கிறது. அப்போது புதிதாக மம்பட்டியானைப் பிடிக்க வருகிறார் பொலிஸ் அதிகாரி பிரகாஷ் ராஜ்.

இடையில், பணக்கார கோஷ்டியொன்று காட்டுவழி வருவதாக கேள்விப்பட்டு, அவர்களைக் கொள்ளையடிக்க மம்பட்டியான குழு முயல்கிறது. ஆனால் வந்தது கல்யாண கோஷ்டி என்பதும், அவர்கள் மணப்பெண்ணை (மீரா ஜாஸ்மின்) மட்டும் அம்போவென விட்டுவிட்டுப் போய்விட்டதையும் அறிந்து, அந்தப் பெண்ணிடமே அனைத்து நகைகளையும் கொடுத்து தன் தம்பியை துணைக்கனுப்பி வைக்கிறார் மம்பட்டியான். ஆனால் அடுத்த நாள் திருமணம் நடக்காததால் மம்பட்டியானை நினைத்தபடி மலையூரிலேயே தங்கிவிடுகிறாள் அந்தப் பெண். ஊருக்கு அளக்கும் படியில் ஒரு படி அவளுக்கும் தரச் சொல்கிறார் மம்பட்டியான்.

பொலிஸ் துரத்தல் தொடர்கிறது. மம்பட்டியானின் ஓட்டமும் தொடர்கிறது. ஆனால் கடைசி வரை பொலிசின் கையில் சிக்காத மம்பட்டியான், இறுதியில் என்னவாகிறார்... அவரை நம்பி வந்த பெண்ணின் கதி என்ன என்பது க்ளைமாக்ஸ்.

ஏற்கெனவே பார்த்த கதைதான் என்றாலும்,' பிரஷாந்த் மற்றும் காமிராமேன் ஷாஜி குமார் மூலம் புதிய வர்ணம் சேர்த்திருக்கிறார் இயக்குநர் தியாகராஜன். காட்சிகளில் பிரமாண்டம், நேர்த்தியான படமாக்கம் என ஒரு மரியாதையை வரவைத்திருப்பது தியாகராஜனின் இயக்கத்துக்கு கிடைத்த வெற்றி.

இந்தப் படத்தில் பிரசாந் கூடுதல் உழைப்பைத் தந்துள்ளார். ஆக்ஷன் காட்சிகளில் அவரது உடல்மொழியை இன்றைக்கு எதற்கெடுத்தாலும் பஞ்ச் டயலாக் விட்டுக் கொண்டிருக்கும் புதிய நடிகர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

கண்ணாத்தாளாக வரும் மீரா ஜாஸ்மின், முந்தைய படங்களை விட அழகாக இருக்கிறார். திருமணம் செய்து கொள்ள மறுக்கும் மணமகனை வெறுக்கும் இடத்தில் மட்டும் அவருக்கு நடிக்க வாய்ப்பு. மற்ற காட்சிகளில் நடக்க மட்டுமே வாய்ப்பு.

ஒரு சின்ன இடைவெளிக்குப்பிறகு மீண்டும் வைகைப் புயல்...

ஒரிஜினல் படத்தில் கவுண்டமணி செய்த அதே சின்ன பண்ணையார் வேடம். காட்சிகளில் கூட பெரிதாக மாற்றமில்லை. ஆனாலும் வடிவேலு வரும்போதை முகம் மலர்ந்து சிரிக்க ஆரம்பத்துவிடுகிறார்கள் ரசிகர்கள் (காட்சிகளில் பெரிதாக காமெடி இல்லாவிட்டாலும்!) குறிப்பாக கோபு பாபு என இரு நாய்களை அவர் மம்பட்டியானிடம் இழக்கும் இடத்திலும், பிரகாஷ் ராஜிடம் மாட்டிக் கொண்டு விழிக்கும் காட்சியிலும் சிரிப்புக்கு உத்தரவாதம்!

மம்பட்டியானைப் பிடிக்கவரும் போலீஸ் அதிகாரியாக பிரகாஷ்ராஜ். இந்த வேடமெல்லாம் அவருக்கு ஒன்றுமே இல்லை... அலட்டிக் கொள்ளாமல் நடித்துள்ளார்.

சொர்ணாவாக வரும் முமைத் கான் சொன்ன வேலையைச் செய்துவிட்டு செத்துப்போகிறார்.

என்னதான் படம் விறுவிறுப் பாகப் போனாலும், ஒரிஜினல் படத்தோடு ஒப்பீடு செய்வதை மட்டும் தவிர்க்க முடிய வில்லை. பழைய மம்பட்டியான் படம் பற்றி எதுவுமே தெரியாதவர்களுக்கு, பிரஷாந்தின் இந்த மம்பட்டியான் பிரசாந்தின் ரசிகர்களுக்கு விருந்தாக இருக்கும்!




# விக்ரம் ஜோடி அஞ்சலி



விக்ரமுக்கு ஈடுகொடுத்து நடிக்க தயாராகி விட்டேன், என்று நடிகை அஞ்சலி கூறியுள்ளார். நடிகை அஞ்சலி கரிகாலன் படத்தில் விக்ரம் ஜோடியாகியுள்ளார். சமீபத்தில் அவர் நடிப்பல் ரிலீசான எங்கேயும் எப்போதும் படம் ஹிட்டானது. அதைத் தொடர்ந்து விக்ரம் படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதனால் சந்தோஷத்தில் இருக்கிறார்.

இதுகுறித்து அஞ்சலி அளித்துள்ள பேட்டியில், விக்ரம் படங்கள் எல்லாமே நல்ல கதையம்சம் உள்ளவை. அவருடன் நடிக்க வேண்டும் என்று எனக்கு ஆசை இருந்தது. தற்போது அது நிறைவேறியுள்ளது. விக்ரம் திறமையான நடிகர். அவருடன் நடிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பெரிய நடிகருடன் இணைந்து நடிப்பது எனக்கு சவாலாகவே இருக்கும். இப்படத்தில் கடினமாக உழைக்க தயாராகி வருகிறேன்.



# பெஸ்ட் இயக்குனர் ஷங்கர்தான் - விஜய்!

அமீர்கான், மாதவன் நடித்த ' இடியட்ஸ், இந்தி படம் வெற்றிகரமாக ஓடியது. இப்படம் தமிழில் பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில், நண்பன் என்ற பெயரில் ரீமேக் ஆகி உள்ளது. இளைய தளபதி விஜய், ஜீவா, ஸ்ரீகாந்த் இணைந்து நடித்துள்ளனர். விஜய்க்கு ஜோடி யாக இலியானா நடித்துள்ளார். மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்த படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகிறது. இதனையடுத்து படத்தின் பாடல் வெளியீட்டு விழா இந்த மாதம் 23ம் தேதி நடைபெறுகிறது. ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ளார். இதனையடுத்து தன்னுடைய பெஸ்ட் இயக்குனர் ஷங்கர் தான் என்று இளைய தளபதி விஜய் கருத்துத் தெரிவித்துள்ளார். இதுபற்றிக் கூறும்போது இதுவரை என்னை இயக் கிய இயக்குனர்களில் ஷங்கர்தான் சிறந்தவர், அவருடைய படத்தில் நடிக்க பல நாட்கள் காத்துக் கிடந்தேன், தற்போது இந்த வாய்ப்பை சந்தோஷமாக முடித்துள்ளேன். ஷங்கர் சிறந்த இயக்குனர் மட்டுமல்ல சிறந்த நடிகரும் கூட, ஒவ்வொரு காட்சிக்கு முன்னாடி அவர் நடித்துகாட்டுவார், அவரின் நடிப்பு என்னை மிகவும் ஆச்சரியப்படுத்தியது எனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி.. பிட்ஸ்...

## ஏப்ரல் 14-ல் அஜித்தின் பில்லா 2

அஜீத் நடிக்கும் பில்லா 2 படத்தின் ஷூட்டிங் 100 நாட்களுக்குள் முடிக்கப்பட்டுள்ளது. மங்காத்தா ரிலீசுக்கு முன்பே, எப்போது தொடங்கியது என்று வெளியில் தெரியாத அளவுக்கு ஆரம்பித்தது பில்லா 2 ஷூட்டிங். விசாகப்பட்டிணத்தில் ஆரம்பத்து, பல பகுதிகளில் விறுவிறுவென படப்பிடிப்பை நடத்தினர்.

யுவன்சங்கர்ராஜா இசையில், உருவாகும் இந்தப் படத்தை இந்துஜா குழுமத்தின் இன் எண்டர்டெயின்மெண்ட் தயாரிக்கிறது. இந்தப் படத்தின் அதிகாரப்பூர்வமான ஸ்டில்கள் பொங்கலன்று வெளியா கும், ட்ரெயிலர் பெப்ரவரியில் வெளியாகும் என்று இந்துஜா குழுமத்தின் சுனில் கேத்ரபால் தெரிவித் துள்ளார்.

படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் ஆரம்பித்துள்ளதாகவும், ஏப்ர லில் படம் வெளியாகும் என்றும் இயக்குநர் சக்ரி டோலெட்டி கூறியுள் ளார்.

## மும்பை ரயில் நிலையத்தில்...

ரசிகர்களின் கோரிக்கைக் கிணங்க மும்பை ரயில் நிலையத்தில், 'ஒய் திஸ் கொலவெறி டி' பாடலை நடிகர் தனுஷ் பாடினார். நடிகர் தனுஷ் நடித்து வெளிவரவுள்ள படம் 3. ஐஸ்வர்யா இயக்கி உள்ள இந்த படத்தில் தனுஷ் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக ஸ்ருதிஹாசன் நடித்துள்ளார்.

இந்த படம் இன்னும் வெளிவராத நிலையில் படத்தில் இடம் பெறும் ஒய் இஸ் திஸ் கொலவெறி பாடல் உலகம் முழுவதும் பிரபலமாகியுள்ளது. தமிழே தெரியாத நபர்களும், இந்த பாடலை முணுமுணுத்தபடி செல் கின்றனர். பலர் தங்களுடைய செல்போன்களிலும் இந்த பாடலை ரிங்டோனாக வைத்துள்ளனர்.

## சிம்புவின் பாடல்

உலக அமைதிக்காக பாடல் ஒன்றை தமிழ் திரையுலக நாயகன் சிம்பு எழுதியுள்ளார். தமிழ் திரையுலகில் நடிப்பு, நடனம், பாடல், இயக்கம் என பல தளங்களில் வலம் வரும் சிம்பு, ஒரு பாடலை எழுதியிருக்கிறார். இது அன்புக்கான பாடலாக, உலகத்தின் Love Anthem - ஆக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

## ரஜினியின் 3 டி அனிமேஷன்

ரஜினியின் 3 டி அனிமேஷன் படத்தின் வேலைகள் முழுவீச்சில் ஆரம்பித்துவிட்டன. முதல் கட்டமாக, சில காட்சிகளை ஸ்டுடியோவில் வைத்து எடுக்கவும் ஆரம்பத்து விட்டார் கள். ரஜினியின் உடல் அசைவுகள், ஸ்டைல்களை இதில் படமாக்கி வருகின்றனர். இந்தக் காட்சிகள் பின்னர் மோஷன் கேப்சரிங் மூலம் அனிமேஷன் ரஜினிக்கு மாற்றப்படும்.

இந்த வாரம் படத்தின் நடிகர் நடிகைகள் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்கள் குறித்த விவரங்களை அறிவிப்பதாக சௌந்தர்யா கூறியிருக்கிறார்.

## கமலுடன் ஆண்டரியா

ஆண்டரியாவுக்கு தமிழில் 3 படங்கள் கைவசம் உள்ளன. திருப்பங்கள் படத்தில் நந்தாவுடனும், வெற்றி மாறன் இயக் கும் வட சென்னையிலும் நடிக்கிறார். அதோடு கமலின் விஸ்வருபம் படத்துக்கும் ஒப்பந்தமாகியுள்ளாராம்.

## வடிவேலின் சீற்றம்

தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவுக்குப் பின்னர் சினிமாக்களிலும், பொது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்காமல் இருந்து வந்தார் நடிகர் வடிவேலு. இந்நிலையில் அகில உலக அரிமா சங்க மாவட்ட எழுச்சி மாநாடு, மதுரை மாவட்டம் வரிச்சியூர் அருகே உள்ள பாத்திமா மைக்கேல் என்ஜினீயரிங் கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற நடிகர் வடிவேலு, நீண்டநாள்களுக்குப் பிறகு மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறேன். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சினிமாவில் நடிப்பதை தவிர்த்து வந்தேன். யாருக்கும் பயந்து இந்த முடிவை எடுக்கவில்லை. சினிமாப் படங்களில் நகைச்சுவை வேடத்தில் நடித்து சிரிக்க வைத்தாலும், எங்களுக்கும் தனிப்பட்ட வாழ்க்கையும் உண்டு. சும்மா இருந்த என்னை சிலர் சீண்டி விட்டனர். வடிவேலு கொலை செய்தான் என்றும், கொள்ளையடித்தான் என்றும் வீணாக அவதூறு பரப்புகிறார்கள்.

இந்த எல்லா பிரச்சனைக்கும் சீக்கிரத்தில் முடிவுகட்டுவேன் என்றார்.

## திணறும் மலையாள சினிமாக்கள்!

தமிழ், இந்தி முன்னணி நடிகர்கள் நடித்துள்ள படங்கள் கேரளாவில் வசூலை அள்ளுகின்றன. இதனால் மலையாள படங்களுக்கே அங்கு சரிவர தியேட்டர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி மலையாள படத் தயாரிப்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கேரளாவில் விஜய், அஜீத், விக்ரம் போன்ற முன்னணி தமிழ் நடிகர்கள், பிரபல இந்தி நடிகர்களின் படங்களுக்கு பெரிய வரவேற்பு உள்ளது. அவர்களது படங்கள் வசூலை அள்ளிக் குவிக்கின்றன.

இதனால் மலையாள படங்களுக்கு தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. விரைவில் விக்ரம் நடிக்கும் ராஜபாட்டை, ஷாருக் கான் நடித்துள்ள டான் 2 படங்கள் கேரளாவில் வெளியாகின்றன. இதனால் மலையாள முன்னணி நடிகர்கள் நடித்த படங்களுக்குகூட தியேட்டர் கிடைக்காத நிலை உருவாகி உள்ளது.



# தமிழில் பிஸி!

அனுஷ்கா

அருந்ததி படம்தான் தமிழ் சினிமாவில் எனக்கு வாழ்வு கொடுத்தது என்று நடிகை அனுஷ்கா கூறியுள்ளார். அனுஷ்கா தமிழில் முன்னணி நடிகையாகி விட்டார். பெரிய ஹீரோக்களுடன் ஜோடியாக நடிக்கிறார். தமிழுக்கு வரும் முன்பு தெலுங்கில், முன்னணி நடிகையாக இருந்த அவருக்கு இப்போது தெலுங்கு படங்கள் கைவசம் இல்லை.

தமிழில் பிஸி நடிகையாக இருப்பது பற்றி அனுஷ்கா பேட்டியொன்றில் பெருமிதமாக கூறியிருக்கிறார். அதில், அருந்ததி படம் என்னை பரபல நடிகையாக்கிவிட்டது. அந்தப் படம் இவ்வளவு வெற்றிபெறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அந்தப் படம் மூலம் தமிழ் படங்களில் நடிக்க தொடங்கினேன். தமிழில் படங்கள் குவிகிறது.

தற்போது 5 படங்கள் கைவசம் உள்ளன. தெலுங்கில் நடிக்க என்னிடம் கால்ஷீட் இல்லை. அடுத்த ஆண்டு வரை தமிழ் படங்களில் ஒப்பந்தமாகியுள்ளேன். நல்ல கதைகளாக இருந்தாலும், திறமையான இயக்குனர்கள் எடுத்தால்தான் அப்படங்கள் ஹிட்டாகும். படங்களின் வெற்றி இயக்குனர் கையில் உள்ளது, என்று கூறியுள்ளார்.

## கமலின் பரிசு

கமல் இயக்கி நடித்துக் கொண்டிருக்கும் படம் விஸ்வரூபம். இந்தப் படத்திற்கான பாடல் வரிகளை வைரமுத்து எழுதியுள்ளார். வைரமுத்து மற்றும் கமலின் சந்திப் பின் போது வைரமுத்துவின் பாடல் வரிகளில் நெகிழ்ந்த கமல் வைரமுத்துவிற்கு மிக உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் உபயோகப்படுத்தும் இத்தாலியிலுள்ள மலையின் பாறைக் குழம்பலிருந்து தயாரித்த பேனா ஒன்றை பரிசளித்ததார்.



ராஜபாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரட்டைக் குழந்தைகளா..? இரு தலைக் குழந்தைகளா..?

பிரேசிலில் ஒரு பெண்ணுக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்துள்ளன. ஆனால் அவர்களின் முழு உடலும் இணைந்துள்ளது.

தலைகள் மட்டும் தனித் தனியாக உள்ளன. இந்த அதிசய சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்துள்ளது.

இரண்டு தலைகளும் சரியாகவும், ஒரேமாதிரியாகவும் உள்ளதாக மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். Emanoel and Jesus என்ற பெயர் கொண்டு அழைக்கப்படும் இரு குழந்தைகளும் நல்ல ஆரோக்கியமாக உள்ளனர்.

பிரேசில் நாட்டிலுள்ள Anajas என்ற இடத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலமே இரட்டைத் தலையைக் கொண்ட இரு குழந்தைகளும் பிறந்துள்ளனர். இந்தக் குழந்தைகளுக்கு இரு மூளைகளும், இரண்டு முள்ளந்தண்டு எலும்புகளும், ஒரே ஒரு இதயமும் உள்ளன. இரண்டு தலைகள் மூலமும் உணவு வழங்கப்படுகின்றது.

இரண்டு வயிறு உள்ளதா என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தவில்லை.


இந்த ஆண்டு பிரேசிலில் பிறந்த இரண்டாவது இரட்டைத்தலைக் குழந்தைகளே இவர்களாவர். முதல் பிறந்த இரட்டைக் குழந்தைகள் ஒக்சிஜன் பற்றாக்குறை காரணமாக இறந்துவிட்டன.

## நவீன கமரா

Ultra Slow motion கேமராவைப்பற்றி அனைவரும் அறிந்திருப்போம். இந்த வகை கேமராக்கள் தான் கிரிக்கெட் ரன் அவுட் Replay யை காட்ட பயன்படுத்தப்படுகிறது. இந்த வகை கேமராக்கள் ஒரு வினாடிக்கு 1000 ஷொட் வரை எடுக்க கூடிய கேமராக்கள் ஆகும். மற்றும் வினாடிக்கு 1 மில்லியன் ஷொட் எடுக்க கூடிய கேமராக்கள் தான் இதுவரை அதிகபட்சமாக இருந்து வந்தது. இந்த கேமரா மூலம் ஒரு துப்பாக்கியில் இருந்து வெளிவரும் குண்டு செல்வதைக் கூட எளிதாக படம் பிடிக்க முடியும். ஆனால் இதையெல்லாம் மீறி யாருமே யூகிக்க கூட முடியாத அளவுக்கு வினாடிக்கு 1 ட்ரில்லியன் Frames எடுக்க கூடிய புதிய கேமராவை இந்திய விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார். இந்த புதிய கேமராவினால் ஒரு லிட்டர் போத்தலில் ஒளி (light) செல்லும் வேகத்தை கூட எளிதாக படம் பிடிக்க முடியும்.

# பல் சுவை






## மாட்டின் முகத்தைப் போன்று...

உலகின் எத்தனையோ விசித்திர மனிதர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதைப் போன்று வித்தியாசமான விபரீதமான ஒரு குறைபாட்டினைக்கொண்ட ஒரு சிறுமி பற்றிய செய்தியே இது. ஹெயிட்டி நாட்டில் பிறந்த 13 வயது சிறுமி மர்லி. இச்சிறுமி விசித்திரமான ஒரு தோல் மற்றும் எலும்பு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளார். தனது முகத்தின் வாயை ஒட்டிய தசைப்பகுதிகள் நீண்டு வளர்ந்து மிகவும் அபாயகரமான தோற்றத்துடன் காணப்படுகிறது. பார்ப்பதற்கு ஒரு மாட்டின் முகத்தைப்போன்று காணப்படுகின்றமை பார்ப்பவர்களை வியக்கவைக்கிறது.



## 'சிப்' உருவான விதம்

இந்த சிப் எப்படி உருவானது என யாராவது சிந்தித்தது உண்டா? சரி அதற்குத்தான் சிப் பற்றிய சிறிய ஒரு தகவல். ஆரம்பத்தில் கொக்கி இல்லாத புதிய முறையைக் கண்டுபிடிக்க வேண்டும் என முயன்ற அமெரிக்க டிசைனர் வைட்கொம் ஜட்சன் 1893 இல் உருவாக்கியதுதான் இந்த சிப். இந்த மகத்தான கண்டுபிடிப்பை அந்த ஆண்டு நடந்த உலக கண்காட்சியில் விற்பனைக்கு வைத்தார். ஆனால் பார்வையிட்ட இரண்டு கோடி பேரில் இருபது பேர்கூட அதை வாங்கவில்லை. பின்னர் ஏகப்பட்ட மாற்றங் களை செய்து 1917 இல் நாம் தற்போது உபயோகபடுத்தும் சிப் வகைகள் தயாரிக்கப் பட்டன. கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 60 ஆண்டுகளுக்கு பின்னர்தான் அவை பரவலாக பழக்கத்துக்கு வந்தன.



## 160 வருடங்கள் வாழும் ஆமை இனம்

ஆபிரிக்காவிலுள்ள Cambridgeshire. விலங்கினக் காட்சிசாலையில் ஆமை ஒன்று ஒரே தடவையில் 45 குஞ்சுகளை ஈன்றுள்ளது. இந்த ஆமை உலகிலுள்ள பெரியவகை ஆமைகளில் மூன்றாவது . இதன் குஞ்சுகள் வளரும் போது 26 முதல் 36 அங்குல நீளத்திலும் 150 Kg நிறையையும் பெறும்!

சாதாரணமாக ஒரு ஆமை 15 - 30 முட்டைகளை இடும் . இம்முறை 45 முட்டைகளை இட்டமை தமக்கு ஆச்சரியத்தைத் தருவதாக இதன் வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த வகை ஆமைகள் 160 வருடங்களுக்கு மேலாகவும் வாழும் வல்லமை கொண்டவை, ஆமை முட்டைகளை மக்கள் அதிகம் விரும்பி உண்பதாலும், ஏனைய மிருகங்கள் மண்ணினுள் இருக்கும் ஆமை முட்டையை உண்பதாலும் இவை அருகி வரும் இனமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## காகிதத்திலிருந்து மின்சாரம்

ஒரு துண்டுக் காகிதம் ஒன்றில் இருந்து மின்சாரம் உருவாக்கும் தொழில்நுட்பத்தை உலகின் பிரபல மின் உபகரணங்களைத் தயாரிக்கும் நிறுவனமான சொனி கண்டுபிடித்துள்ளது. இந்தக் கண்டு பிடிப்பின் மூலம் சொனி நிறுவனம் தனது சுற்றுச் சூழல் தொடர்பான சமூக அக்கறையினையும் வெளியிட்டுள்ளது. வீணாகப்போகும் துண்டுக் காகிதத்தில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் செயன் முறையினை சொனி நிறுவனம் அண்மையில் மாணவர்களுக்கு விளக்கியது. துண்டு துண்டாக வெட்டப்பட்ட காகித அட்டையை ஒரு போத்தலினுள் இட்டு அதனுள் தண்ணீரையும் சேர்த்து நன்றாக குலுக்கி சில நிமிடங்கள் வைக்கப் பட்டது. குறித்த சில நிமிடங்களின் பின்னர் கலவையிலிருந்து உருவாகிய மின்சாரத்தில் இருந்து சிறிய மின்விசிறி சுழல வைக்கப்பட்டது.



## சாதனை

சாதிக்க துடிப்பவர்கள் எந்தவொரு தடையையும் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள். அதை நிரூபித்துக் காட்டுகிறார் இந்த ஊனமுற்ற மனிதன். நாம் ஒரு கிலோ பொருட்களைக் கையில் கொண்டு செல்லும்போது பெரும் அவஸ்தை பட்டு செல்வோம். ஆனால் இவரோ தன் தலையால் சுமார் 80 கிலோ நிறையுடைய [illegible] இருந்து [illegible] தூக்கி சாதனை படைத்துள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயலலிதாவின் கடந்த கால அரசியல் நடத்தைக் கோலங்களைக் கொண்டு இக்கால நடத்தையை தீர்மானிக்கும் எவரும் கடும் ஆச்சரியத்துக்குள்ளாகும் நிலை தான் இன்று ஏற்பட்டுள்ளது. பகட்டு பாடாடோபம், அடிவருடிகளுக்கு அள்ளிவழங்கல், மத்திய அரசுகளுடன் முரண்படல் என தாறுமாறான முடிவெடுப்பது தான் அவரது வழக்கமாக இருந்துள்ளது. 1991லிருந்து 1996 வரை முதன் முதலாக முதலமைச்சரான சமயம் ஆரம்பத்தில் காங்கிரஸுடன் உறவாடிய அவர் பதவிப் பெருமையில் பின்பு காங்கிரஸின் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் தமிழக

# ஜெயலலிதாவுக்குப் பிறகு யார்?



ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி முதலியோருடன் கடுமையாக மோதிக் கொண்டார். இவருடன் மோதி மோதி சென்னாரெட்டிக்கு மாரடைப்பு வந்து மரணித்தே போனார். அந்தளவு அகம்பாவம் தலைவிரித்தாடியது. சாதாரணமாக நாட்டின் பிரதமர் அல்லது ஜனாதிபதி ஒரு மாநிலத்துக்கு உத்தியோகபூர்வமாக வருகை தரும்போது அவர்களை மாநில முதல்வரும் விமான நிலையம் சென்று வரவேற்பது மரபு. ஆனால் ஜெயலலிதாவோ பிரதமர் நரசிம்மராவ் சென்னை வரும் போது வரவேற்கச் சென்றதே இல்லை. என்னபடியெல்லாம் பிரதமரை அவமதிக்க முடியுமோ அப்படியெல்லாம் அந்தக் கீழ்த்தரமான நடத்தையை அவர் அரங்கேற்றினர்.

கடந்தவாரம் தான் ஜெயலலிதா முதல்வராக பதவியேற்றபின் முதல் தடவையாக பிரதமர் மன்மோகன்சிங் சென்னை வந்தார். பதவியேற்றவுடன் டில்லி சென்று பிரதமர் அளித்த அதித கௌரவத்தையும் பெற்றுத் திரும்பிய ஜெயலலிதா சிலகாலம் சென்றவுடன் பிரதமரைத் திட்டத் தொடங்கியிருந்தார். இந்தப்பின்னணியையும் முந்தகாலத்தில் ஜெயலலிதாவின் வார்த்தையையும் வைத்துக் கணிப்பிட்டவர்கள் பிரதமரை வரவேற்க ஜெயலலிதா விமான நிலையம் செல்லமாட்டார் என்றே எதிர்பார்த்தனர். ஆனால் முன்னைய பல தவறுகளை திருத்திக் கொண்டு விட்ட ஜெயலலிதா சிரித்த முகத்துடன் சென்று ஆளுநர் ரோசய்யாவுடன் இணைந்து பிரதமரை சென்னை விமான நிலையத்தில் வரவேற்றுள்ளார். ஜெயலலிதா எவ்வளவோ மாறி விட்டார் என்பது பல நடவடிக்கைகளிலிருந்து கடந்த 6 மாதங்களில் துலாம்பரமாகத் தெரிகிறது.


ஜெயலலிதாவின் நடத்தை மிதுவ்ன மாற்றம் நியாயமாக கருணாநிதிக்கு பெரும் கவலையைத் தந்திருக்க வேண்டும். ஆனால் அதெல்லாம் அவருடைய மரமண்டையில் உறைக்கப் போவதில்லை என்பது நிச்சயம். 17 வயதிலிருந்து அரசியல் செய்து இன்று 88 வயதாகும் கருணாநிதி கட்சியைக் கைப்பற்றி 42 வருடங்களாகியும் இன்றுவரை ஒரு சிறு தவறையேனும் திருத்திக் கொள்ளவில்லை. அவருடன் ஒப்பிட்ட வயதிலும் அரசியல் அனுபவத்திலும் சிறியவரான ஜெயலலிதா தனது தவறுகளில் இருந்து பாடம் கற்கும் விதம் அலாதியானதாகும். கூட்டணிக் கட்சித் தலைவர்களை மதித்து அரவணைத்து நடப்பதில் கலைஞருக்கு ஜெயலலிதா விற்கும் நிகரானவரல்ல என சிலர் கூறக் கூடும். ஆனால் அந்த விஷயத்தில் கூட ஜெயலலிதா அந்த இடை வெளியை வெகுவேகமாக நிரப்பி கலைஞரை வெகுவிரைவில் முந்தும் நிலையிலுள்ளார். கலைஞரைப்போல் ரவுடிகளை வைத்து கட்சி நடத்து வதுபவர் கூட்டணிக் கட்சிகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். தானே நேர்மையான கட்சியை நடத்தி ஆள்பவனுக்கு கூட்டணிக் கட்சி என்ற ஒன்று அவசியமே இல்லை என்பதை ஜெயலலிதா கடந்த சட்டசபை மற்றும் உள்ளாட்சித் தேர்தலிலும் நிரூபித்துள்ளார்.

ஜெயலலிதாவின் இரண்டாவது பதவிக்காலம் கொள்கை ரீதியான பல தாறுமாறான முடிவுகளைத் தந்ததும் மெய்தவம் தான். அரச ஊழியர் வேலை நிறுத்தத்தை ஒடுக்கியமை, பொடா சட்டத்தில் வைகோ முதலான அரசியல் எதிரிகளை அடாவடித்தனமாக பழிதீர்த்தமை, மதமாற்ற தடுப்புச் சட்டம் என ஒரு உருப்படி தாண்டவமே ஜெயலலிதா ஆடி முடித்தார். ஆனால் அவர் அந்தத் தடவை முதல்வராக இருந்தபோது நடந்த 2004 லோக்சபாத் தேர்தல் ஜெயலலிதா வாழ்வில் திருப்புமுனையாகவே அமைந்துவிட்டது. அதில் 40 தொகுதிகளிலும் படு தோல்வி கண்ட அவர் விழித்துக் கொண்டு நேரெதிர்த் திசையில் பயணிக்கத் தொடங்கினார். இதனால் அடுத்து வந்த 2006 சட்டசபைத் தேர்தலில் ஆட்சியிழந்தபோதும் முன்னைய தடவைபோல் கடுமையான தோல்வி ஏற்படவில்லை. அவ்வாறு தொடங்கிய ஜெயலலிதாவின் மறுசீரமைப்புப் பாணி இன்று சசிகலாவில் வந்து முடிந்துள்ளது. களையாகப் படர்ந்து விழுங்கிய அந்தக் குடும்பத்தை களையெடுத்து ஜெயலலிதா ஒரு பெரும் புரட்சியே நடத்தியுள்ளார் எனலாம். தனக்கென குடும்பம் இல்லாதநபர் தனது ஆளுகையின் கீழ்ப்பட்ட தனிப்பட்ட கருமங்களுக்கு அவர் சசிகலாவை நம்பி இருந்தது குற்றமல்ல. உதாரணமாக எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த போது அவரது துணிமணி, உணவு, மருந்துகள் முதலியவற்றை உடன் இருந்து கவனிக்க மனைவி ஜானகியம்மாள் இருந்தார். ஜெயலலிதா யாருமில்லாதவர் என்பதால் சசிகலாவிடம் இந்த உதவிகளைப் பெற்றார். அதற்கு கைம்மாறாக ஒரு ராஜ்ஜியத்தினையே கேட்கும் சசி குடும்ப சதியை கட்சியினரோ, சோவோ யாருமே ஏற்கப்போவதில்லை. சசி வெளியேறிய போது தட்டிக்கேட்க ஒரு உள்ளாட்சி சபை உறுப்பினர், எம்.எல்.ஏ, எம்.பி, அமைச்சர் யாருமே முன்வரவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். இந்த மாதிரி தி.மு.க.வில் ஊழல் செய்தவர்களை வெளியேற்றி இருந்தால் கலைஞரோ இரண்டுபடுத்தி இருப்பார். ஆனால் அ.தி.மு.க.வில் இந்தப் பாச்சா எல்லாம் பலிக்காது. ஜெயலலிதாவை விட்டால் கட்சி



இல்லை என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவரின் சுண்டு விரல் அசைவில் கட்சி அடங்கும் என்பதும் தெரிந்த விடயமே. ஆனாலும் 63 வயதான ஜெயலலிதா இன்னும் அதிக காலம் முதல்வராக இருக்கும் உடல் தகுதி உள்ளவரா என்ற கேள்வி கட்சியினரை வாட்டுகிறது. எம்.ஜி.ஆர் 70 வயதில் பதவியில் இருக்கையிலேயே இறந்தார். அதன்படிப் பார்த்தால் இன்னும் 7 வருடத்தில் ஜெயலலிதாவின் வாரிசு தயாராக வேண்டும். முன்பு இளம் வயதிலிருந்த கம்பீரம் குறைந்து ஜெயலலிதா வயோதிப தோற்றத்துக்குள் ஒடுங்கி வருவது அவரது உடல் அசைவுகளில் தெரிகிறது. வாரிசு தேடவேண்டிய நேரம் சசி குடும்பம் துரோகி முத்திரையை தாமாகவே குத்திக்கொண்டது அவர்களின் தவறும் அதிஷ்டமுமே. அடுத்து பன்னீர்ச்செல்வமா துக்ளக் சோவா எனப் பல கேள்விகள் இதன் மூலம் பலமாக எழுந்துள்ளது மட்டும் உண்மையே ஆகும்.

சுரேந்திரஜித்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

01.01.2012 - 07.01.2012




**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

புரட்சியை விரும்பும் நீங்கள், பழமையில் புதுமையைப் புகுத்துவதில் வல்லவர்கள். பணவரவு அதிகரிக்கும். வீட்டின் அத்தியாவசியத் தேவைகளை முடிப்பதிலிருந்த சிரமங்கள் நீங்கும். கணவன்-மனைவிக்குள் நிலவிய பனிப்போர் குறையும். கெட்ட பழக்கங்களிலிருந்தும், கெட்ட நண்பர்களின் சகவாசங்களிலிருந்தும் விடுபடுவீர்கள்.




**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்**

அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும் பேசும் நீங்கள், நியாயத்திற்கு கட்டுப்படுவீர்கள். மனோபலம் அதிகரிக்கும். தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். கன்னிப் பெண்களே! உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3-ஆம் பாதங்கள்**

புத்திசாலித்தனமும், பொறுமையும் அதிகமுள்ள நீங்கள், கடமை தவறாதவர்கள். குடும்பத்தில் நல்லது நடக்கும். திடீர் பயணங்களால் அலைச்சல், செலவுகளால் திணறுவீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கவலைகள் வந்து நீங்கும்.




**புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

ரசிப்புத் தன்மை அதிகம் கொண்ட நீங்கள் எதையும் கலை நயத்துடன் செய்யக் கூடியவர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். ஒரு சொத்தைக் காப்பாற்ற மற்றொரு சொத்தை விற்க வேண்டி வரும். கன்னிப் பெண்களே! முகப்பரு, தோல் நீங்கும்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

தர்மத்தை தலைமேல் காக்கும் நீங்கள், எதையும் முகத்துக்கு நேரே பேசிவிடுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். என்றாலும் வீண் செலவு வந்துப் போகும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். கன்னிப் பெண்களே! பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள். உங்களின் படைப்புகளுக்கு வேறொருவர் உரிமை கொண்டாடுவார்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அஸ்தம், சித்திரை 1, 2-ஆம் பாதங்கள்**

தலைமைப் பண்பு அதிகம் கொண்ட நீங்கள் தலைக்கனம் இல்லாதவர்கள். புண்ணியத் தலங்கள் செல்வீர்கள். தூரத்து சொந்தங்கள் தேடி வருவார்கள். சளித் தொந்தரவு, தூக்கமின்மை, தொண்டை வலி வந்து செல்லும். தடைப்பட்ட உயர்கல்வியைத் தொடர்வீர்கள். உழைப்பால் உயரும் வாரமிது.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்**

யார் தடையிலும் வாழ விரும்பாத நீங்கள், தன் கையே தனக்குதவி என நினைப்பவர்கள். எதிர்பார்த்த பணவரவு உண்டு. குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பிள்ளைகளின் நட்பு வட்டம் விரியும். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். வீண் விரையம், ஏமாற்றம் வந்துசேரும்.




**விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மற்றவர்களின் வெற்றிப் பாதைக்கு வித்திடும் நீங்கள் எளிமையாக வாழ்பவர்கள். பழைய நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். உறவினர்கள் உங்களின் பெருந்தன்மையை புரிந்துக் கொள்வார்கள். கண் எரிச்சல், பார்வைக் கோளாறு, பல் வலி வந்துசெல்லும்.





**மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்**

பல சமயங்களில் சமாதானப் புறாவாக செயல்படும் நீங்கள், அநியாயங்களைக் கண்டால் வெகுண்டெழுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வீண் டென்ஷன், அலைச்சல், அடிவயிற்றில் வலி வந்துசெல்லும். கன்னிப் பெண்களே! போலியாக பழகியவர்களிடமிருந்து ஒதுங்குவீர்கள்.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் , திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்**

பரந்த மனசு கொண்ட நீங்கள் எப்பொழுதும் கூட்டமாக வாழ ஆசைப்படுவீர்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வரும். பழைய உறவினர்கள், நண்பர்களை சந்திப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

எப்போதும் மனசாட்சிக்கு மதிப்பளிக்கும் நீங்கள், சொன்ன சொல் தவறாதவர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் இலாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சின்னச் சின்ன இடர்பாடுகள் ஏற்படும்.




**பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். முன்பின் அறியாதவர்களிடம் அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது. கடின உழைப்பால் முதலிடம் பிடிக்கும் வாரமிது.

# செயல்களை பொறுத்தே விளைவு




தண்ணீரில் கல்லைப்போடும்போது அலைகள் தோன்றி நீர்நிலையின் கரை வரையிலும் பரவும். இதுபோல, நம் மனதில் ஓர் எண்ணம் விழுந்தால் அந்த எண்ணம் நல்லதோ, தீயதோ உடல் எங்கும் பரவி விடுகிறது. மனம் என்னும் குளத்தில் உருவாகும் சிறு தீய அலைகள் கைகளை அடைந்து தீய செயல்களைச் செய்கிறது. விழிகளை அடைந்து தீய காட்சிகளைக் காண்கிறது. கால்களை அடைந்து தீய இடங்களுக்குச் செல்கிறது. ஆக, எண்ணங்களுக் கேற்பவே நாம் நல்ல செயல்களையோ கெட்ட செயல்களையோ மேற்கொள்கிறோம். எனவே மனதில் நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒருவர் சிறந்த மனிதராக திகழ மூன்று குணங்கள் தேவை. முதலில் நல்லவராக வாழவேண்டுமென்ற உறுதியான, அசையாத நம்பிக்கை வேண்டும்; இரண்டாவதாக பொறாமை, வெறுப்பு, கர்வம் ஆகிய குணங்களிலிருந்து விடுபடவேண்டும். மூன்றாவதாக நம்மைச் சுற்றிலும் உள்ளவற்றில் ஓர் அமைப்போ அல்லது தனி நபரோ தொண்டு செய்யும்போது பாராட்டும் உள்ளம் வேண்டும்.

சர்க்கரையை விஷம் என நினைத்து அதை நீரில் கரைத்து சாப்பிட்டால் தீமை எதுவும் உண்டாகிவிடாது. அதேசமயம் விஷத்தை நீரில் கலந்து, அதை கரும்புச்சாறு என்று நினைத்து குடித்தால் நிச்சயம் ஆபத்துதான் விளையும். எனவே தீய செயலை நல்லதென்று நினைத்து செய்தாலும், விளைவு தீயதாகவே இருக்கும்.

– பாபா

# திருமணத்தில் நட்சத்திரமும், ஜாதகமும்



நட்சத்திரம் என்பது என்ன? ஒரு மனிதனை அறிமுகம் செய்வது நட்சத்திரம். இந்த உலகத்திற்கு நான் இந்த நட்சத்திர மண்டலத்தில் இருந்து வந்துள்ளேன் என்று உரைப்பது ஒருவருடைய நட்சத்திரம். கோவில்களில் அர்ச்சனை செய்யும்போது கூட, உங்களுடைய சாதி என்ன என்று கேட்கப்படுவதில்லை, என்ன நட்சத்திரம் என்றுதான் கேட்கப்படுகிறது. ஏனெனில் அதுவே ஒருவருடைய விலாசம். அதாவது நான் இந்த நட்சத்திர மண்டலத்தில் இருந்து வந்துள்ளேன் என்று கூறுகிறோம். அதனால்தான் பெயரைச் சொல்லி, நட்சத்திரத்தை சொல்கிறோம். எனவே நம்மை இனங்கண்டறிவது நட்சத்திரம்தான்.

எனவே திருமணத்திற்கு முதலில் நட்சத்திரப் பொருத்தம் பார்க்கிறோம். நட்சத்திரத்தை முடித்த பின்னர், மீதமுள்ள ஒன்பது இடங்களையும் பார்க்க வேண்டும், அதற்கு ஜாதகத்தை புரட்டுகிறோம். நட்சத்திரப் பொருத்தம் என்பது ஒரு தொடக்கம். அப்போதெல்லாம் 21 பொருத்தங்கள் பார்ப்பார்கள்.

இதையெல்லாவற்றையும் தாண்டி இப்போது நாம் பார்ப்பது குறிப்பாக ஐந்து பொருத்தங்களைத்தான். தினப்பொருத்தம், கணப்பொருத்தம், யோனிப் பொருத்தம், ராசிப்பொருத்தம், ரஜ்ஜுப்பொருத்தம் ஆகியன. இந்த ஐந்தும்தான் அடிப்படையானது. இதன் அடிப்படையில்தான் மற்ற பொருத்தங்கள் எல்லாம் பார்க்கப்படுகிறது. எனவே நட்சத்திரப் பொருத்தத்தைப் பார்த்துவிட்டு ஜாதகப் பொருத்தத்தைப் பார்க்காமல் இருந்துவிடலாகாது. 10 பொருத்தங்கள் பார்த்து திருமணம் செய்துவைத்த பத்தாவது நாளிலேயே விவாகரத்துசெய்து கொண்டவர்களையெல்லாம் பார்க்கிறோம்.

இதற்கு காரணம் என்ன? கிரகங்களையும் பார்க்கவேண்டும். கிரகங்கள் என்று சொன்னால் அந்த கிரகங்கள் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். தினப் பொருத்தம் என்பது என்ன? தினந்தோறும் இவர்களிடையே நடைபெறும் சம்பாஷணைகள், அதாவது உரையாடல்கள். கணவன் ஒரு கேள்வி கேட்டால், அதற்கு மனைவி சொல்லும் பதிலும், மனைவி ஒரு கேள்வி கேட்டால் அதற்கு கணவன் சொல்லும் பதிலும் முக்கியமானது. அப்படிக் கேட்கும்போது பாந்தமாக ஒருவருக்கு ஒருவர் பதில் கூற வேண்டும்.

உதாரணத்திற்கு, தாகமாக இருக்கிறது, தண்ணீர் கொடேன் என்று கணவர் கேட்க, அதற்கு மனைவி, அதோ அங்கு குடம் இருக்கிறது, சொம்பு இருக்கிறது, எடுத்துக் குடிக்க வேண்டியதுதானே? என்று சொன்னால் என்ன ஆவது? அதே நேரத்தில், இருங்க, இதோ கொண்டு வருகிறேன் என்று சொல்வது எப்படியிருக்கிறது? அதாவது இந்த உரையாடல் உள்ளிட்ட ஒவ்வொரு பரிமாறலிலும் அன்னியோன்யம் இருக்க வேண்டும். இதைக் காண்பதுதான் தினப் பொருத்தம் என்பது.

தினப் பொருத்தம் இருந்தும், லக்னத்தின் இரண்டாவது வீட்டில் 6க்கு உரியவர், 8க்கு உரியவர் இருந்தால், அவர்கள் இருவரும் பேசிக்கொள்வதே ஒரு முரண்பாடாக இருக்கும். அதாவது கணவர் கேட்பது ஒன்றாகவும், மனைவி கூறும் பதில் வேறாகவும் இருக்கும். அது எரிச்சலூட்டும். எனவேதான் ஜாதகப் பொருத்தம் என்பது மிகுந்த அவசியமாகிறது.

இன்னும் கூறப்போனால், நட்சத்திரப் பொருத்தம் என்பது அவர்கள் இருவரை மட்டும் சார்ந்தது, ஆனால், ஜாதகப் பொருத்தம் என்பது அவர்களுடைய உறவுகள் நிலை பற்றி உரைக்கக் கூடியது. மாமனார், மாமியார், நாத்தனார் போன்றவர்களோடு அனுசரித்துப் போவார்களா என்பதைக் கண்டறிய ஜாதகப் பொருத்தம் பார்ப்பது அவசியம். எனவே இந்த இரண்டிற்குமே நாம் முக்கியத்துவம் கொடுத்துப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம்





# இவர்களுக்கு விடிவு எப்போது?

## மலையகத்தில்

இரா.புத்திரசிகாமணி

இயங்கும் மலையகத் தொழிற்சங்கங்களின் போட்டா போட்டியினால் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைகள் நெரிக்கப்படுகின்றன.

இப்படியான ஒரு நிலைமையிலேயேதான் நாட்டன் வெளி ஓயா தோட்டத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் அதிகமான அப்பாவித் தொழிலாளர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இத்தோட்ட நிர்வாகம் காலம் காலமாக தோட்டத் தொழிலாளர்களைப் பிரித்தாளும் கைங்கரியத்தில் மிகவும் நேர்த்தியாகக் காய்நகர்த்தி வந்துள்ளது.

வெளி ஓயாத் தோட்டம் ஆறு பிரிவுகளைக் கொண்ட, இரண்டாயிரம் ஏக்கர் தேயிலைக் காணிகளை உள்ளடக்கிய ஒரு பெரிய தோட்டம். இத்தோட்டத்தை வட்டவளை பிளான்டேசன் கம்பெனி 99 வருட குத்தகைக்குப் பெற்று நடத்துகின்றது.

அரசாங்கச் சொந்தமாக இருந்த தோட்டங்களை 22 தனியார் கம்பனிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் போது இந்தக் கம்பெனிகள் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டன.

★ தொழிலாளர்களின் அடிப்படை வசதிகள்.

★ நலன்புரி செயற்பாடுகள்

★ பொது வசதிகள்

★ விளையாட்டுத் துறை ஊக்குவிப்பு.

எனத் தொழிலாளர்களின் நலன் பேணும் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றே உறுதியளித்திருந்தன.

தோட்டங்களைத் தனியார் கம்பெனிகளுக்கு ஒப்படைக்கும் போது பல தொழிற்சங்கங்களும் எதிர்த்தன. ஆனால் ஒரு சில தொழிற்சங்கங்கள் இதனை ஆதரித்ததுடன் தமது பினாமிகள் ஊடாகவும் சில காட்டுக் கம்பெனிகளை உருவாக்கித் தாமும் மறைமுகமான பங்காளிகளாக இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகளும் இல்லாமல் இல்லை.

வெலி ஓயா தோட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி, தேசிய தொழிலாளர் சங்கம், செங்கொடி சங்கம், விளையாட்டுத்துறைகள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்கம் எனப் பல தொழிற்சங்க உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதைச் சரியாகப் பயன்படுத்தி தோட்ட நிர்வாகம் அவ்வப்போது தனக்குத் தேவையான தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் தலைவர்களையும் சரிப்படுத்தி வைத்துக் கொண்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு வந்துள்ளது. தொழிலாளர்களுக்கு நன்மை கிட்டாவிட்டாலும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நன்மை அடைந்துள்ளனர் என்று இத்தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

இப்போதும் அதே நிலைமைதான் ஏற்பட்டுள்ளது. கொழுந்து பறிக்கும் தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளத்திற்குக் கொண்டுவர வேண்டிய தேயிலைக் கொழுந்தின் அளவை 17 கிலோவிலிருந்து 20 கிலோவாக அதிகரித்துள்ளது. ஆனால் தொழிலாளர்கள் இதனை ஏற்க மறுத்து விட்டனர்.

தொழிலாளர்களை மிரட்டும் தொனியில் அக்கர ஓயா, லோவர் தன்டுகல ஆகிய இருபிரிவுகளின் தொழிலாளர்களை நாடிபிடித்துப் பார்க்க எண்ணியதோடு அதனைச் செயலிலும் காட்டியது. அதாவது 20 கிலோவுக்கு குறைவாக கொண்டுவந்த தொழிலாளர்களுக்கு வேலை மறுத்துள்ளது.

தோட்ட நிர்வாகத்தின் இந்த அராஜக செயலைக் கண்டித்து ஒட்டுமொத்தமாக வெலி ஓயா மேற்பிரிவு, கீழ்ப் பிரிவு, அப்பர் தன்டுகல, லோவர்தன்டுகல, பதுக்காடு, அக்கர ஓயா ஆகிய ஆறு பிரிவுகளைச் சேர்ந்த இரண்டாயிரம் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்துவிட்டனர்.

இங்கு ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அதாவது சம்பள உயர்வு தொடர்பாக தோட்டக் கம்பெனிகளுடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தில் - தொழிலாளர்கள் கொண்டு வர வேண்டிய தேயிலைக் கொழுந்தின் எடையை அதிகரிக்க வேண்டுமாயின் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களின் தோட்டக்கமிட்டி தலைவர்களுடன் பேசித் தீர்மானிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தொடர்ச்சியாக 11 நாள்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தபோதும் கூட்டு ஒப்பந்தத்தில் கை ஒப்பம் இட்ட எந்த ஒரு தொழிற் சங்கமும் நேரடியாகச் சென்று தொழிலாளர்களைச் சந்திக்கவும் இல்லை. தொழில் திணைக்களத்திற்கோ அல்லது வட்டவளை பிளான்டேசன் கம்பெனிக்கோ இப்பிரச்சினை தொடர்பாக எந்தவிதமான முறைப்பாடுகளையும் செய்யவில்லை.

கூட்டு ஒப்பந்தம் செய்துள்ள தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்களே இந்த தோட்டத்தில் கூடுதலாக இருக்கின்றனர். அப்படி இருந்தும் இந்த தொழிற் சங்கங்கள் தலையிடவும் இல்லை, அக்கறை காட்டவும் இல்லை என்று வேதனையுடன் கூறுகின்றனர். பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்கள் கூட்டு ஒப்பந்தத்தில் ஒப்பம் வைத்துள்ள சில தொழிற் சங்கங்கள் வெளியில் இருந்து தோட்ட நிர்வாகத்திற்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும், எத்தனை நாளைக்கு இவர்கள் போராட்டம் நடத்தப் போகின்றனர் பசி வந்திட எல்லாம் பறந்துவிடும் என்றும் உபதேசம் செய்துள்ளனர்.

தோட்ட நிர்வாகம் இந்த முதுகெலும்பற்ற தொழிற் சங்கங்களின் தைரியத்துடனேயே விடாப்பிடியாக நின்றுள்ளது.

பெருந் தொழிற்சங்கங்கள் இவர்களைக் கைவிட்டுவிட்ட போதும் கூட்டு ஒப்பந்தத்தில் கை எழுத்திடாத தொழிற் சங்கங்கள் இவர்களுக்கு கை கொடுத்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல் துறை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி. இராதாகிருஷ்ணன், நிர்வாக செயலாளர் கிருஷ்ணன், விளையாட்டுத்துறைகள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் வட்டவளை பிளான்டேசன் தலைமையகத்துடனும் மாவட்டப் பிராந்திய அலுவலகத்துடனும் பேச்சுகளை நடத்தி உள்ளனர். நேரடியாகத் தோட்டத்திற்கு சென்று தொழிலாளர்களையும் சந்தித்துள்ளனர்.

இதன் பயனாக வேலை நிறுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தொழிலாளர்களும் கடந்த 26 ஆம் திகதி முதல் வேலைக்குத் திரும்பி உள்ளனர்.

இப் பேச்சுகளின் படி தற்காலிகத் தீர்வாக தொழிலாளர்கள் தொடர்ந்தும் வழமைபோல் 17 கிலோ கொழுந்தைக் கொண்டு வரலாம். தோட்ட நிர்வாகி (பெரியதுரை) ஒரு மாத காலத்திற்கு வேலைத் தளத்திற்கு செல்லக் கூடாது என்று இணக்கம் காணப்பட்டது.

இப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வானது எதிர்வரும் 30.12.2012 ஆம் திகதி ஹட்டன் உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள உயர் மட்டப் பேச்சுகளில் தீர்மானிக்கப்படும். இதுதான் தற்காலிக முடிவு.

இந்த முடிவைக் காண்பதற்கு இரண்டாயிரம் தொழிலாளர்கள் 11 நாட்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

கூட்டு ஒப்பந்தம் செய்தவர்கள் கதைவிடுவது போல் நாட்சம்பளம் 515/- ரூபா என்றால் இரண்டாயிரம் தொழிலாளர்கள் 11 நாளைக்கு (515X2000X11) ஒரு கோடியே 13 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் இதைவிட்டு உண்மையான அடிப்படைச் சம்பளம் 385/- ரூபா என்றால் (385X2000X11) 84 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவையும் இழந்துள்ளனர். இதனை மீண்டும் பெற்றுக் கொடுப்பார்களா?

பதினொரு ஒருநாள் வேலை நிறுத்தம் செய்து பல கோடி ரூபா வருமானத்தையும் இழந்து நிற்கும் தொழிலாளர்களுக்கு இன்றுவரை நிரந்தரத் தீர்வு கிட்டவில்லை.

இதற்கான அடிப்படைக் காரணம் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான போட்டா போட்டிதான். கூட்டு ஒப்பந்தம் என்ற சுருக்குக் கயிறை இறுக்கமாக இறுக்கி இறுக்கி தொழிலாளர்களை மூச்சுத்திணறடித்துள்ளன இந்த தொழிற் சங்கங்கள். இந்த அப்பாவித் தொழிலாளர்களுக்கு விடிவே கிடையாதா?

★ ★ ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மூச்சுக் குழாய் ஆஸ்த்மா

சிலருக்கு இயற்கையாகவே உடலின் ஒவ்வாமைகளின் வெளிப்பாடாக எக்ஸிமா, ஆஸ்த்மா போன்ற நோய்கள் காணப்படும். ஒவ்வாப் பொருட்களுடன் தொடுகை ஏற்படும்போது சுவாசக் குழாயின் சுவரில் அதிதீவிர தொழிற்பாடு OVER SENSITIVITY (தொட்டாச் சுருங்கிச் செடியில் தொட்டவுடன் அது எதிர்வினையைக் காட்டுவதுபோல) ஏற்பட்டுச் சுவாசக் குழாயின் உட்புறம் வீங்கும். சுவாசக் குழாயின் விட்டம் குறைவதனால் சுவாசத்தின்போது சிக்கொலி கேட்கும்.

சுவாசத்தின்போது சிக்கொலி கேட்கும் அனைவருக்கும் ஆஸ்த்மா நோய் ஏற்பட்டுள்ளதாகக் கருதக் கூடாது. வேறு காரணங்களாலும் சிக்கொலி கேட்கலாம். மூச்சுக் குழாய் ஆஸ்த்மா நோயாளர் குருதிச் செறிவூக்கி சுரக்கும். சுவாசிப்பதில் சிரமம் காணப்படும். ஆஸ்த்மா நோய் பரம்பரைத் தொடர்புடையதாகவும் இருக்கலாம். இதயம் தொடர்பானதாக வேறொரு வகையான ஆஸ்த்மாவும் ஏற்படுவதுண்டு. ஆதலால் வைத்தியரைச் சந்தித்து எந்த வகையான ஆஸ்த்மா ஏற்பட்டுள்ளது என அறிவது அவசியமானதாகும்.



பின்வருவனவற்றுள் ஒன்றோ பலவோ ஒவ்வாமைக் காரணியாக இருந்து மூச்சுக்குழாய் ஆஸ்த்மாவை ஏற்படுத்தலாம். சாம்பிராணி, மெழுகுவர்த்தி, மண்ணெண்ணெய் போன்றவற்றின் புகை, மரத்தூள் அடுப்புப் புகை, வாகனப் புகை, சிகரட் புகை, மா அரிசித்தூசி, புத்தகத் தூசி, தேயிலைத் தூசி, அஸ்பெஸ்டஸ் தூசி, சீமெந்துத் தூசி, தலை மயிர்ச் சாயங்கள், தோலை அழகாக்கும் பூச்சுகள், வாசனைப்பொருட்கள், சவர்க்காரங்கள், சில மருந்துத் தயாரிப்புகள், சில வகைக் காளான் தயாரிப்புகள், சில வகை மருந்துகள், அன்னாசிப்பழம், கஸ்தூரிக்காய், கணவாய், முட்டை, பட்டர், மாஜரின், சிலவகை குளிர்பானங்கள், குளிர்பானங்களிலிருக்கும் நிறப்பொருள்கள், சில வகைச் செருப்புகள், சில உலோகங்கள், உணவு தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்ற நிறப்பொருள்கள். பிளாஸ்டிக், மிருகங்களின் உரோமங்கள், பறவைகளின் இறக்கைத் துகள்கள், பறவைகளின் எச்சங்கள், நுளம்புக்கடி, மூட்டைக் கடி, தெள்ளுக்கடி, உண்ணிக்கடி, பாம்புக்கடி, மயிர்க்கொட்டி, பல்லி, எலி, கரப்பான்பூச்சி, தெள்ளு, உண்ணி, மூட்டைப் பூச்சி, எறும்பு, கறையான், நத்தை போன்றவையும் அவற்றின் எச்சங்களும், சிலவகை மருந்துகள், வைக்கோல் துகள்கள், சில தாவரங்களும் அவற்றின் பூக்களும், சில புல்வகைகளும் அவற்றின் பூக்களும், வெளியில் ஏற்படும், சில வகை ஒலிகள் சில பழங்களின் மணம், மீன் மணம், இறைச்சி மூட்டை பொரிக்கும் மணம், நெய் உருக்கும் மணம், சாக்கடை மணம், மலகூட மணம், கழிவு-குப்பைகளின் மணம் போன்றவை. நகர்ப்புறங்களில் கழிவு-குப்பைகள் ஒழுங்காக அகற்றப்படாது தேங்கி நாறுவதாலேயே நகர்ப் புறங்களில் மூச்சுக் குழாய் ஆஸ்த்மா அதிகமாக ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. படுக்கை விரிப்புகளிலும் தலையணைகளிலும் படியும் எமது உடலிலிருந்து உதிரும் தோல்த் துகள்களும் அவற்றில் வாழும் சிற்றுண்ணிகளும் மூச்சுக் குழாய் ஆஸ்த்மாவை ஏற்படுத்தலாம். இவற்றுள் எது மூச்சுக் குழாய் ஆஸ்த்மாவை ஏற்படுத்துகிறது என அறிந்து அதனைத் தவிர்த்து ஆஸ்த்மா ஏற்படுவதைத் தடுக்கலாம். வைத்தியர்கள் சுவாசக் குழாயின் உட்புறம் வீங்குவதைத் தடுப்பதற்கு ஒரு மருந்தையும் சுவாசக் குழாயின் விட்டத்தைக் கூட்டுவதற்கு இன்னொரு மருந்தையும் சிபாரிசு செய்யலாம். சுவாச உறிஞ்சிகளாக விற்கப்படும்



இந்த மருந்துகள் இதே மருந்துகளின் குளிசைகளை விடச் சிறந்த பயன் தருபவையாகும். ஆஸ்த்மா எப்பொழுது ஏற்படும் என எதிர்வு கூற முடியாது என்பதனால் நோயாளிகள் எங்கே சென்றாலும் இந்த மருந்துகளை எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும். தீவிரமான நிலையில் ஆஸ்த்மா உயிராபத்தையும் ஏற்படுத்தலாம்.

கதைப்பதில் சிரமம், ஆழமில்லா-விரைவான சுவாசம், மூச்சிரைப்பு, பயந்த முகம், உதடுகள் நீல நிறமாதல், அதிக வியர்வை, அதிகரித்த நாடித் துடிப்பு என்பன ஆபத்தின் அறிகுறிகளாகும். அவ்வேளைகளில் நோயாளியை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

எங்கும் எளிதாகக் கிடைக்கும் அரளிச்செடி அதிக முயற்சி ஏதும் இல்லாமலேயே பல்கிப் பெருகும் இயல்புடையது. இதனுடைய இலையையோ, வேரையோ மருத்துவநோக்கில் யாரும் பயன்படுத்த மாட்டார்கள், பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் அவை நச்சுத்தன்மைவாய்ந்தவை. அரளிச்செடியின் மலரை மட்டுமே அதுவும் வெளிப்பயன்பாட்டுக்கு மட்டும் பயன்படுத்தலாம். அரளிப் பூவை அரைத்துக் கந்தகத்துடன் கலந்து தொடர்ந்து தடவி வந்தால் கிரந்தி குழிப்புண் குஷ்டம் போன்றவற்றை விரைவில் குணமாகும்.

# கிரந்திக்கு அரளிப்பூ

இதனை தக்க முறைப்படி மருந்தாக்கிப் பயன்படுத்தினால் தலைவலி, சுரம், பித்தக்கோளாறுகள் அகலும் ஆனால், இவற்றைக் கைதேர்ந்த மருத்துவர்கள்தான் மருந்தாக்கவேண்டும் ஏனெனில் சற்று அஜாக்கிரதையாகப் பயன்படுத்தினால் விஷத்தன்மையடைந்து விபரீதமான விளைவுகளை உண்டாக்கிவிடக்கூடும்.



வறண்ட நிலத்தில்கூட அரளி அழகாக பூத்து அருமையான வாசனையைத் தரும். விலங்குகள் இயற்கையாகவே இந்த தாவரத்தின் அருகில் போவதில்லை என்பது இயற்கையின் விநோதம் தான். வேகமாக வளரும் இந்தத் தாவரத்தை சாலைகளில் தடுப்பரண்களாக வளர்க்கிறார்கள். ஆகு இரைச்சல் இவற்றையெல்லாம் தடுக்கும் திறன் இந்த தாவரத்துக்கு உள்ளது. மண்ணரிப்பைத் தடுப்பதால் புதிய குடியிருப்புகள் தோன்றும் பகுதிகளிலும் அரளி தாவரம் வளர்க்கப்படுகிறது

அரளித் தாவரத்தின் ஓர் இலை ஒரு குழந்தையின் உயிரைப் பறிக்க போதுமானது. வயிற்றுப்போக்கு வாந்தி கடுமையான வயிற்றுவலி நினைவிழப்பு மயக்கம் ஒழுங்கற்ற இதயத்துடிப்பு வரிசையில் கடைசியாக மரணம் ஏற்படும். அரளி நஞ்சை உட்கொண்ட ஒருவருக்கு 24மணி நேரத்திற்குள் மரணம் சம்பவிக்கவில்லையென்றால் அதற்குப்புறம் அவன் பிழைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் என்பது ஒரு ஆச்சரியமான செய்தி.

அரளி நஞ்சுக்கு மருத்துவம் செய்யும் போது நோயாளியை வாந்தியெடுக்கச் செய்வதும் வயிற்றை காலிசெய்வதும் செறிவூட்டப்பட்ட கார்பனை உட்கொள்ளச்செய்வதும் நஞ்சை உறிஞ்சும்படி செய்வதும் முக்கியமாகும்.

## வலி ஏற்படும் பாகத்தைப் பார்த்தால் வலி குறையுமா?

மருத்துவர் ஊசிபோடும் தருணம் கண்களை மூடிக்கொள்வது, மருத்துவர் ஊசியைக் குத்துவதைப் பார்க்காமல் தலையைத் திருப்பிக்கொண்டு வேறு எதையாவது பார்ப்பது போன்றவற்றைச் செய்து அதிகம் வலி தெரியாமல் இருக்க நாம் முயலுவோம்.

யுனிவர்சிற்றி கொலேஜ் என்ற லண்டன் பல்கலைக்கழகமும், இத்தாலியில் உள்ள மிலான் - பிகோக்கா பல்கலைக்கழக ஆராய்ச்சி மையமும் சேர்ந்து நடத்திய ஒரு ஆராய்ச்சியில் வலிக்கும் பாகத்தையே மேலும் பெரிதுபடுத்தி பார்த்துக்கொண்டிருந்தால் வலியின் அளவு மேலும் குறைகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியில் பங்கு பெறுபவரின் ஒரு கையில் இந்தக் கம்பியை வைத்து அதன் சூட்டை அதிகரித்துக்கொண்டே போகும்போது சரியாக எந்தளவு வெப்பத்தில் அவரால் சூட்டைத் தாங்க முடியாமல் போக ஆரம்பிக்கிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் குறித்துக் கொண்டனர்.

பின்னர் முகம் பார்க்கும் கண்ணாடியைப் பயன்படுத்தி அந்நபர் தனது மற்ற கையைப் பார்க்கும் போது அவர் தனது வலி ஏற்படும் கையைப் பார்ப்பது போன்ற பிம்பத்தை ஆராய்ச்சியாளர்கள் உண்டு பண்ணினர்.

அதன் பிறகு இதே செய்முறையை மீண்டும் செய்தபோது அந்த நபர் தாங்கக்கூடிய சூட்டின் அளவு அதிகமானது.

அதுவே அவரது கையை இயல்புக்கும் பெரிதாக இருக்கும்படியான ஒரு பிம்பத்தை தோற்றுவிக்கும் போது அவர் தாங்கக்கூடிய சூட்டின் அளவு மேலும் அதிகமானது.

ஆனால் தனது கைகளை அல்லாது வேறு பொருட்களை அந்நேரம் பார்ப்பாரேயானால் அந்நபர் தாங்கக்கூடிய சூட்டின் அளவு குறைந்து போனது.

ஆக, வலி ஏற்படும் போது வேறு இடங்களைப் பார்த்துக் கொண்டிருக்காமல் வலிக்கக்கூடிய இடத்தைப் பார்த்தால் நாம் உணரக்கூடிய வலியின் அளவு குறைகிறது. என்பது நாம் இந்த ஆராய்ச்சியில் இருந்து தெரிந்து கொள்ளும் பாடம் எனலாம்.

இந்த கண்டுபிடிப்பின் விளைவாக சிகிச்சைகளின் போது நோயாளிகளின் வலி உணர்வை குறைக்கக்கூடிய புதிய உத்திகளை உருவாக்க முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# ஒரே கல்லில் இரண்டு மாங்காய் வீழ்த்தும் புத்திசாலித் தரகர்

த.இளவரசன்,
இளவாலை.
**கேள்வி:** பார்த்தால் பசி தீரும் என்ற தொடரின் அர்த்தமென்ன? எதைப்பார்த்தால் பசிதீரும் பித்தரே?
**பதில்:** இராமன் சீதை காலத்திலேயே கண்ணொடு கண் நோக்கின் புராணம் ஆரம்பமாகிவிட்டது. எதைப்பார்த்தால் பசி தீரும் என்பது அவரவர் மனதையும் இரசனையையும் பொறுத்தது.



க.கயல்விழி,
வவுனியா.
**கேள்வி:** அண்டப்புழுகு, ஆகாசப்புழுகு எனக் கூறப்படுவதன் அர்த்தம் என்னவோ?
**பதில்:** அரச வானொலி தொலைக்காட்சிச் சேவைகளை மனதில் வைத்துக் கேள்வி கேட்டு என்னை மாட்டிவிடத் திட்டம் போடுகிறீர் போலும்.

த.மயில்வாகனன்,
பரந்தன்.
**கேள்வி:** அரசாங்க பாடசாலையில் கற்பித்துக் கொண்டு தனியார் கல்வி நிறுவனமொன்றையும் நடத்தும எனது நண்பன் குறித்து என்ன நினைக்கிறீர்?



**பதில்:** அரச ஆஸ்பத்திரியிலும் தனியார் மருத்துவ மனையிலும் ஒரே சமயத்தில் பணிபுரியும் டாக்டர்களின் அண்ணனாகவோ,தம்பியாகவோ இருப்பார் போலும்.

வே. அ. அகிலேஸ்வரன்,
திருட்டன்.
**கேள்வி:** கொஞ்சம் கூட அடங்காத பெண் டாட்டியை அடக்க வழிதெரியாமல் தடுமாறுகிறேன். வழியேதும் சொல்வீரா பித்தரே?
**பதில்:** மொட்டைத் தலை டாக்டரிடம், வழுக்கைத் தலையில் முடிவளரச் செய்ய வைத்தியம் செய்யப்போக நினைக்கும் அப்பாவி போலல்லவா இருக்கிறீர். இங்கும் நிலை அதே நிலை தான்.



எம். பரமசிவம்,
உடுவில்.
**கேள்வி:** இல்லறத்தில் துன்பம் வருவதெப்போது பித்தரே?
**பதில்:** கணவன் ஒரு மாதத்தில் ஐயாயிரம் ரூபா உழைக்கும் போது மனைவி நாலாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குள் அம்மாதத்துக்கான செலவைச் சமாளித்தால் அது இன்பம். மாறாக மாதம் ஐயாயிரத்து ஐந்நூறு ரூபா செலவு செய்யும் மனைவி வாய்த்தால் துன்பமோ துன்பம் தான்.



தா.கண்ணன்,
மாங்குளம்.
**கேள்வி:** இப்போதுதான் இளம் பெண்ணொருத்தியைக் காதலிக்க ஆரம்பித்துள்ளேன். அவளிடம் எப்படி அணுகவேண்டும் பித்தரே?
**பதில்:** Little by Little

இ.செல்வரதி,
மட்டக்களப்பு.
**கேள்வி:** சீதனம் கொடுத்துத் திருமணம் செய்வதில்லை என்ற கொள்கையில் எனது சினேகிதி உறுதியாக இருக்கிறாளே?
**பதில்:** உமது சினேகிதியின் உறுதிக்குப் பாராட்டுக்கள் ஆனால் வாழ்க்கையில் உமது சினேகிதிக்கு அந்த உறுதி மட்டும் தான் மிஞ்சும் பரிதாப நிலைக்கு யாரால் என்ன செய்ய இயலும்?

ம. பூபாலசிங்கம்,
கிளிநொச்சி.
**கேள்வி:** நானோ தொழில் தேடி அலைகிறேன். தரகரோ தொழில்செய்யும் பெண்ணொருத்தியின் சாதகக் குறிப்பைக் கொண்டு வந்து தந்திருக்கிறாரே?
**பதில்:** ஒரே கல்லில் இரண்டு மாங்காய் வீழ்த்தும் அதி புத்திசாலி ஐயா அந்தத் தரகர். அந்தப் பெண்ணுக்குத் திருமணமும் ஆகும். உமக்கு சமையல் தொழிலாவது கிடைக்குமே?

## சொற்சிலம்பம் போட்டி இல: 502

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | ■ |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:...............................................

விலாசம்:...............................................................

...............................................................

கையொப்பம்:...............................................

### மேலிருந்து கீழ்

01. அதிசய செயல்களை செய்யும் சாதனை
02. ஆணியை அடிப்பது இதனால்
03. வாழ்
04. பார்த்தல்
05. புவிநடுக்கம்
06. இன்றைய உலகின் இயக்க நாயகன். கண்ணுக்குத் தெரியாமல் கடந்து வருபவன்.
08. கன
11. பிரி
12. மெல்லிய உலோகப் படலம்
14. எருதின் ஏரிக்கு இப்படிப் பெயர்.
15. நீளத்தையும் உயரத்தையும் விட மற்றையது
16. வீண்
17. முன்னிலையில்
18. சுகம்
20. பலவல்ல
21. நெருப்பில்லாமல் இது வராது

### இடமிருந்து வலம்

01. நித்தியம்
05. உலகம்
07. வெட்டு
08. யானையை வழி நடத்துபவன்
09. வஞ்சனைத் திட்டம்
10. நாவிதன் செய்வது
12. கொழுவு
13. கணவன்
15. இல்லம்
16. முன்னர் வீடுகளில் அரைப்பது இதில் தான்.
17. கூரையின் உச்சி
18. தற்கால
19. சேர்
20. பெண்கள் காலில் அணியும் அணிகலன்.
22. வெற்றிலையுடன் பாக்கும் சேர்த்து வாயில் தரிப்பது
23. சிறையில் இருப்பவன்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 502

சொற்சிலம்பம்சொற்சிலம்பம் 502 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2012 ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 22 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் மட்டுமே அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். சரியான விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி வாரம் அலுவலகம்,
561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 499 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.உபவாசம், 02.சாத்திரி, 03.வதி, 04.உரை, 05.தகவல், 06.வில்லை, 08.உடு, 10.நல்ல, 13.தகனம், 14.இன்று, 16.வதம், 17.தலைவிதி, 18.கடுமை, 20.தகடு, 21.குகை, 22.பரி

### இடமிருந்து வலம்

01.உசாவல், 04.உதவி, 07.பத்தி, 08.உரைகல், 09.வாதி, 10.நடி, 11.வலை, 12.சரிதல், 14.இல், 15.கலவன், 18.கன, 19.தறுதலை, 21.குடும்பம், 23.கவி, 25.விதி,

## பாராட்டுப் பெறுவோர்

(1) பொ.நமசிவாயம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(2) திருமதி. சத்தியலெட்சுமி உமாபதிசிவம்,
பரமநயினார் கோவிலடி,
ஆரையம்பதி -01
(3) கே.அரசெல்வரன்,
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
(4) செல்வி- வி.சுவர்ணமதி,
ஈச்சந்தீவு,
கிண்ணியா.
(5) எச்.எல்.யூ.ஏ.லெவ்னை,
இல.486/A,கம்பியாவத்தை,
கெலி ஓயா.
(6) ம.குருச்சந்திரன்,
இல.39/24,சிவன் வீதி,
திருகோணமலை.
(7) A.M.அல்.அப்பாஸ்,
இல.282, ஓடாவியார் வீதி,
ஏறாவூர் -2
(8) மயூரிகா செல்வரட்ணம்,
'குகானந்த வாசா', ஏழாலை மத்தி,
ஏழாலை.
(9) திருமதி செ. கலைமகள்,
இல.6-8/AC,
வியாசர் வீதி, தோணிக்கல்,
வவுனியா.
(10) கே.எம். இன்ஸம்,
இல.14 புளியடி குறுக்கு வீதி,
ஏறாவூர்-06.

## போட்டி இல. 499 இல் பரிசு பெற்றோர்

1 ஆம் பரிசு — செ. சந்திரகுமாரி, புதிய கொலனி, மாங்குளம், முல்லைத்தீவு.

2 ஆம் பரிசு — ஏ.சீ. ஏ.றஹுமான், இல 332,ஆர்.கி.வீதி. ஏறாவூர் - 6A


3 ஆம் பரிசு — சுர்மனன் அனோத்மா, கனிந்தியன் குளம்.பகுதி-1. அக்கராயன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சுடர்

## கடந்து செல்லட்டுமா...?




## பொன்மொழிகள்

1. அதிர்ஷ்டத்தின் அன்னை ஊக்கம்.
2. கடவுளைத் தொழு; ஆனால் உழைப்பை நிறுத்தாதே!
3. இடைவிடாத ஊக்கத்துக்கு எந்தத் துன்பமும் இல்லை!
4. அதிகாலை எழும் பறவை நெடுந்தூரம் செல்லும்!
5. ஊக்கமுள்ளவனிடம் கம்பளம் இருக்கும்; சோம்பேறியிடம் ஆடு தான் இருக்கும்!
6. சலிப்பில்லாதவன் வெற்றி அடைவான்!
7. வேகமாக நடக்கும் இரண்டு கால்களைக் கண்டு ஆமைதான் பழிக்கும்!
8. மூடிய வாய்க்குள் பேரிக்காய் வந்து விழுவதில்லை!
9. விடாமுயற்சி உள்ளவனிடம் இறைவன் இருக்கிறார்!
10. முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை!

## வர்ணம் தீட்டுக

சிறுவர் சிறுமியர்களே..! உங்கள் கைவண்ணத்தைக் காட்டி உருவத்தை மெருகூட்டுங்கள்.





# கடமையே கடவுள்! வேலையே வழிபாடு!!

ஒரு தந்தைக்கு மிகவும் சோம்பேறியான மகன் ஒருவன் இருந்தான். அவனைத் திருத்த முடியாமல் அவனுக்கு ஜோடி மாடுகளும், எண்ணெய் ஆட்டுவதற்கு ஒரு செக்கும் வாங்கிக் கொடுத்து, தனியே எண்ணெய் ஆட்டிப் பிழைத்துக் கொள்ளச் செய்துவிட்டார். அந்த சோம்பேறி அப்போதும் திருந்தவில்லை. மாடுகளை செக்கில் கட்டியவுடன் அதன் கொம்புகளில் சலங்கையைக் கட்டினான்.

மாடு சுற்றும்போது சலங்கை சத்தம் கேட்கும். அது நின்றுவிட்டால் சத்தமும் நின்றுவிடும். அப்போது மட்டும் அதை கவனித்து ஓட்டினால்போதும். அதுவரை நிம்மதியாக வேறு இடத்தில் படுத்திருக்கலாம் - இப்படி எண்ணி அவன் அப்படிச் செய்தான். கொஞ்ச நேரம் கழித்து எழுந்து வந்து கவனித்தான். செக்கில் அவன் போட்ட எள் அப்படியே இருந்தது. மாடு மட்டும் சுற்றிக் கொண்டிருந்தது.

இவ்வளவு நேரம் சலங்கை சத்தம் கேட்டுக் கொண்டிருந்ததே. ஆனால், எண்ணெய் ஆட்டப்படவில்லையே என திகைத்து மறுபடியும் மறைவில் போய் நின்று கவனித்தான்.


இவன் போய் விட்டதைக் கண்ட மாடு, சுற்றுவதை நிறுத்திவிட்டு, ஒரே இடத்தில் நின்று கொம்பை மட்டும் ஆட்டி சலங்கை சத்தத்தை உண்டு பண்ணியது.

சோம்பேறியுடன் பழகிய மாடு அல்லவா அது!

மனிதன் இன்பமாக வாழவே பிறந்திருக்கின்றான். ஆனால், அவன் துன்பத்தில் தவழுகிறான். இது வருந்தத்தக்க விஷயம். ஆனந்தத்தின் ஆதாரம் மனிதனிடமே இருக்கிறது.


நேர்மையான வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று தனது கடமையின் மேல் பக்தி கலந்த ஒரு ஈடுபாடு. கடமையே கடவுள். வேலையே வழிபாடு.


## கண்டுபிடியுங்கள்...



இரண்டு படங்களுக்கிடையேயும் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. முயற்சி செய்து கண்டுபிடியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உலகின் மிக நீளமான கிறிஸ்மஸ் கேக்கை சீனாவை சேர்ந்த 80 சமையல் காரரர்கள் சேர்ந்து தயாரித்துள்ளனர். கடைகளில் பல வண்ணங்களில் பல்வேறு சுவை களிலான கேக்குகள் வைக் கப்பட்டிருக்கும்.

இவ்வாறான கேக்குகளைப் பார்க்கையிலேயே வாயில் எச்சில் ஊறும். எதைச் செய்தாலும் சற்று வித்தியாச மாகச் செய்து உலகின் கவனத்தை தனது பக்கம் திருப்புவோர் இருக்கிறார்கள்.

சீனாவைச் சேர்ந்த 80 சமையல்காரர்கள் இந்த ஆண்டு கிறிஸ்மசுக்கு நாம் செய்யும் கேக்கை சீனா மட்டுமல்லாமல் உல கமே மறக்கக் கூடாது என்று நினைத்தார்கள். இதற்காக அவர் கள் 1,068 மீற்றர் நீளமுள்ள கிறிஸ்மஸ் கேக்கை தயாரித்தனர்

மேலும் இதை மக்கள் பார்வைக்காக வைத்த பிறகு அந்த கேக்கை வெட்டி விற்பனை செய்தனர். இதில் கிடைக்கும் பணம் ஷாங்காயில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 4 குழந்தை களின் கீமோதெரபி மருத்து வத்திற்கு வழங்கப்படுகிறது.

கடந்த 2010ஆம் ஆண்டு பிரான்ஸை சேர்ந்தவர்கள் செய்த 207 மீற்றர் நீளமுள்ள கேக் தான் இதுவரை உலகின் மிக நீளமான கிறிஸ்துமஸ் கேக்காக இருந்தது. தற்போது சீனர்கள் தயாரித்துள்ள கேக் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒரு பெண்ணின் கழுத்தை வைத்து...

ஒரு பெண்ணின் கழுத்தைப் பார்த்து அவரின் வயதைச் சொல்லி விடலாம். அதற்கு காரணம் கழுத்திலே ஏற்படும் சுருக்கங்கள் மற்றும் கோடு கள். வழவழப்பான கழுத்தைப் பெறுவது அரிது. ஆனால் கீழ்வரும் பயிற்சி களைச் செய்வதன் மூலம் கழுத்தை சுருக்க மில்லாமல் நன்றாக வைத்துக்கொள்ள முடி யும்.

## தினசரி கழுத்துப் பயிற்சி

★ தலையை பின்புறம் 10 முறையும் முன் புறம் 10 முறையும் சாய்க்கவும்.

★ தலையை நன்றாக பின் நோக்கி வைத் துக் கொண்டு, வாயை நன்றாகத் திறந்து அசைத்து மூடவும்.

★ தலையை ஒரு பக்கத்திலிருந்து மறுபக் கத்திற்கு திருப்பவும். பிறகு தலையை வலது தோள் பட்டை வரை கொண்டு சென்று மறுபடி இடது தோள்பட்டைக்கு கொண்டு செல்லவும். இது போல் 10 முதல் 20 தடவை செய்யவும்.

## கழுத்துப் பராமரிப்பு

★ நடக்கும் போதும், உட்காரும் போதும் தலையை நிமிர்த்தி தோள்பட்டையை பின் பக்கம் தள்ளிய படி இருக்கவும்.

★ உலர்ந்த காற்று மற்றும் வெயில் ஆகியவற்றிலிருந்து உடம்பை பாதுகாத்துக் கொள்ளவும். நீச்சல் பயிற்சிக்குப் பின், நல்ல நீரில் குளித்து உப்பு தண்ணீர் மற்றும் குளோ ரின் ஆகிய வற்றிலிருந்து உடம்பை பாதுகாக் கவும்.

★ கழுத்துப் பகுதியை இறுக்கமாக்கும் கிரீம் உபயோகிக்கலாம். கிரீமை மேல் நோக்கி தேய்க்க வேண்டும்.

★ முகத்திற்கு தரும் முக்கியத்துவத்தை கழுத்திற்கும் தரவேண்டும்.

★ கழுத்திற்கு மாஸ்க், மஸாஜ் ஆகியவை மிகவும் முக்கியம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UTHAYAN

## Guest House - I



Spend your Holidays with homely hospitality in Jaffna. Located 1 KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.



**No. 392/6, Navalar Road, Jaffna.**

**021 – 2225660, 021 – 5677608, 071 - 5 36 36 36**



# UTHAYAN

## Guest House - II

No. 12, Sivagurunathar Lane,
Off Kasthuriyar Road, Jaffna.

*T.P: 021 – 2222330,*
*021 – 5677603, 071 - 5 36 36 36*


Spend your Holidays with homely hospitality in Jaffna. Located ½ KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.




## குளிர்பானங்களை அருந்தும் நாய்கள்...

எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அங்கே குளிர்பானங்கள் முக்கிய இடம்பிடித்து விடுகின்றன. கலர் கலராக ஒளிரும் குளிர்பானங்களை அப்படியே குடிப்பது மனிதர்களுக்கு மாத்திரம் தெரிந்த விடயமல்ல. நாங்களும் இதில் சொந்தம் கொண்டாடுவோம் என்கின்றன செல்லப் பிராணியான நாய்கள்.






## வனவிலங்குகளும் நண்பனாகும்...



வனவிலங்கை விரும்பும் ஆர்வலர்களுக்கு கிடைத்த விருந்தே இது. சக்திவாய்ந்த மலைவாழ் கொரில்லாக்கள் உல்லாசப் பயணிகளுடன் உறவாடும் காட்சியே இது. மனிதர்களால் வளர்க்கப்படும் கொரில்லாக்களை விட காட்டுச் சூழலில் வளரும் கொரில்லாக்கள் மனிதர்களுடன் இயல்பாகப் பழகுகின்றன. உகண்டாவில் உள்ள *Bwindi* என்ற தேசிய பூங்காவில் தான் மேற்படி காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

## அமெரிக்க இளைஞர்களின் ...



கூகிளின் கூகிள் செய்டர்கெய்ஸ்ட் என்ற வலைதளம் 2011ல் அதிகம் தேடப்பட்ட பெயராக இந்த ரெபெக்கா ப்ளாக்கை அறிவித்துள்ளது. இது கூகிள் ப்ளஸ், ஸ்டீவ் ஜாப்ஸ், ஆப்பிள் ஐஃபோன் போன்ற வார்த்தை தேடல்களை விட அதிகம். யார் இந்த ரெபெக்கா ப்ளாக்? ரெபெக்கா ப்ளாக் அமெரிக்காவின் புதிய பாப் பாடகி. ஃப்ரைடே (Friday) என்ற பாப் பாடலை யூ ட்யூபில் வெளியிட்டு அது உலகமெங்கும் பரவ, 2011 ஒரே வருடத்தில் உலகத்தின் சூப்பர் ஸ்டாரான இந்த ரெபெக்கா ப்ளாக்குக்கு ஆல்பம் 2011ல் ரிலீசான போது வயது .. 13 தான் ! இது எப்படி இருக்கு. ஒரு நடிகை போல இருக்கும் ரெபெக்கா ப்ளாக்கின் அழகான முகம் இப்போது பல அமெரிக்க இளைஞர்களின் கைக் கணனிகளில்...


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ் [illegible] பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, ஜனவரி 01 ஆம் திகதி வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org